விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 24 வெள்ளிக்கிழமை (10.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஆதாரங்கள் வெளிவரும் நிலையில் சர்வதேச விசாரணைகள் அவசியம்

## சர்வதேச கண்காணிப்பகம் வலியுறுத்தல்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பிலான ஆதாரங்கள் வெளிவந்து கொண்டுள்ள நிலையில், இக் குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் தவறி வருவதாக மனிதவுரிமைகள் கண்காணிப் பகம் குற்றம் சுமத்தியுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை விசாரணைக்குட்படுத்த ஆளும்தரப்பினரே முயல்கின்றனர்

### ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங் கள் தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியம் குறித்து வலியுறுத்தும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அந்த விடயங்களில் ஜனாதிபதிக்குத் தொடர்பு இருப்பதை ஆளும்கட்சி உறுப்பினர்களே நிரூபிக்க முயல்வதாக குற்றஞ்சாட்டுகிறார்.

தற்போதைக்கு ஜனாதிபதியைச் சூழ்ந் துள்ள அவ்வாறான மந்த புத்தியுள்ளவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடந்தால் மிகவிரை வில் ஜனாதிபதி சர்வதேச விசாரணை ஒன்றுக்கு முகங்கொடுக்கநேரிடும்என்று அவர் சுட்டிக்காட்டு கின்றார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அரிசிக்கு நேற்று முதல் கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

அரிசிக்கு நேற்று நள்ளிரவு முதல் கட்டுப் பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதாக கூட்டு றவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு அறி வித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் சம்பா அரிசிக் கான அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபா யாகவும். நாட்டரிசி, வெள்ளை, சிவப்பு அரிசி களின் அதிகபட்ச விலை 60 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தமிழ்க்கட்சிகளின் அரங்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவருமாறு தமிழ்க்கட்சிகளின் அரங்கத்திற்கு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, தொலைபேசி மூலம் இந்த அழைப்பைவிடுத்துள்ளதாகதமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த்தேசிய விடுதலை முன்னணியின் செய லாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரி வித்தார்.

கொழும்பிலுள்ள தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு இச்சந்திப்பு நடைபெற வுள்ளதாக சிவாஜிலிங்கம் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ்க் கட்சிகளின் (15ஆம் பக்கம் பார்க்க)

## தடையை நீக்கக்கோரி வைகோ வழக்கு

(சென்னை)

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என, சென்னை உயர்நீதிமன் றில் வைகோ வழக்கு தொடர்ந்துள்ளார். அவர் தாக்கல் செய்த மனுவில் கூறி இருப்பதாவது.

கடந்த மே 14ந் திகதி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகள் நீடிப்பு செய்து மத்திய அரசு அறி விப்பாணை ஒன்றை வெளியிட்டது.

இதுபற்றி விசாரித்த தீர்ப்பாயம் புலிகள் மீதான தடை (15ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை போர்க்குற்ற விசாரணைக்கு வலுவான சாட்சிகள் கிடைத்துள்ளன

## பிரித்தானிய சட்டவல்லுநர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பான வலு வான சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால் விசாரணைகளை மேற்கொள்ள முடியுமென பிரித்தானிய சட்ட நிறுவனத்தின் முன்னணி குற் றவியல் சட்டத்தரணி ஜூலியன் நோலஸ் தெரி வித்துள்ளதாக சனல் 4 தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக வீடியோவில் காண்பிக்கப்பட்ட உட லம் விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவினைச் சேர்ந்த இசைப்பிரியாவினுடையது என்பதனை தாம் உறுதிப்படுத்தியுள்ளதாக பிரித்தானியாவின் சனல் 4 தெரிவித்துள்ளது.

சனல் 4 இன் நேற்று முன்தினம் மாலை 7 மணி செய்தியறிக்கையில் இவ்விடயம் தொடர் பான விவரணம் ஒன்று ஒளிபரப்புச் செய்யப் பட்டதுடன் இது தொடர்பில் Matrix Chambers எனும் பிரித்தானிய (15ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீன விசாரணைக்கு இராணுவம் எதிர்ப்பு

(கொழும்பு)

போர்க்குற்றம் தொடர்பில் சுயாதீன விசாரணை வேண்டும் என்று வரும் கோரிக் கைகளை இலங்கை இராணுவம் நிராகரித் துள்ளது.

நிர்வாணப்படுத்தப்பட்டு கைகள் பின்னால் கட்டப்பட்ட கைதிகளை சிப்பாய்கள் தலையி லும், காலிலும் சுட்டுக்கொல்லும் காட்சிகள் வெளியாகியுள்ளன. அதில் தரையில் இரண்டு பெண்களின் உடல்கள் இருக்கின்றன. இதில் ஒருவரின் அடையாளத்தை தாம் உறுதிசெய் துள்ளதாக (15ஆம் பக்கம் பார்க்க)

## நாடுமுழுவதும் மழையினால் ஒருலட்சம் மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையினால் 34 ஆயிரத்து 357 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 331 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையம் தெரி வித்தது.

இதுவரை 6 பேர் இறந்துள்ளதுடன் அதிக ளவு வெள்ளப் பாதிப்புக்குட்பட்ட மாவட்டமான மன்னாரில் 40 ஆயிரத்து 74 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 8 ஆயிரத்து 365 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 452 பேரும், கிளிநொச்சியில் 5 ஆயிரத்து 628 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கம்பஹா, புத்தளம், வவு னியா, முல்லைத்தீவு, நுவரெலியா, கண்டி ஆகிய பகுதிகளில் (16ஆம் பக்கம் பார்க்க)

## சீமான் இன்று விடுதலை

(சென்னை)

நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமானை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தது செல்லாது என்று இந்திய உயர் நீதி மன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

நாம் தமிழர் இயக்கத்தின் தலைவரும், திரைப்பட இயக்குனருமான சீமான் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாகக் கூறி, அவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசு சிறையில் அடைத்துள்ளது.

இதைத் (15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னியிலிருந்து தப்பியோடிய கரும்புலிகள் லண்டனில் செயற்படுவதாக தகவல் கசிவு

(கொழும்பு)

வன்னியில்அரசபடையினர்இறுதிப் போரைத் தீவிரமாக மேற்கொண்டிருந்த காலகட்டத்திலும் அதற்கு முன்னரான போர் நடவடிக்கைகளின் போதும் வன்னியிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பியோடிய புலிகள் இயக்கத்தின் கரும்புலிப் பிரிவினர்கள் அடங்கிய தீவிர குழுவொன்று லண்டனில் இயங்கி வருவதாகத் தெரியவந்துள்ளது.

லண்டனில் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றிய கண்காணிப்பும் தடை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் மேற்படி கரும்புலிகளின் குழுவினர் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற வகையில் பகிரங்கமாக இயங்காமல் சாதாரண மக்களைப் போலவே நடமாடி வருவதாகக் குறிப்பிட்ட புலிகளுக்கு எதிரான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லண்டனிலுள்ள புலிகளுக்கு எதிரான தரப்புகளிடமிருந்து இத் தகவல் வெளிவந்துள்ளது. மேலும் இந்தக் குழுவினரே அண்மையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற இருந்த இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகக் குறிப்பிட்ட சொற்பொழிவு நிகழ்ச்சி ரத்துச் செய்யப்படுவதற்கு மூல காரணமாக இருந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

மேலும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்துக்கு அருகில் இருந்த இந்தக் குழுவினரே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனவும் இவ்வாறு இவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாக வருவதற்கு லண்டனில் இயங்கும் உலகத் தமிழர் அமைப்பே ஒழுங்குகளை மேற்கொண்டதாகவும் குறித்த லண்டனிலுள்ள புலிகளுக்கு எதிரான குழுவினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-5)

# சுனாமியின் போது காணாமல் போன குழந்தை 6 வருடத்தின் பின்னர் மீட்பு

சுனாமி அனர்த்தத்தின் போது காணமற் போனதாக நம்பப்பட்ட 6 வயதுடைய சிறுமியொருவர் வெல்லம் பிட்டியவிலுள்ள வீட்டிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த சிறுமி பிறந்து இரண்டு நாட்களேயான நிலையில் காணாமற் போனதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபைத் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

காலிப் பகுதியிலிருந்து கிடைக்கப் பெற்ற தொலைபேசி அழைப்பை அடுத்து இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. தென்பகுதி வைத்தியசாலைப் பணியாளர் ஒருவரால் குறித்த குழந்தை மேற்படி பாதுகாவலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

குறித்த குழந்தையை வளர்க்க முடியாதெனக் கூறி தமக்கு அறிமுகமில்லாத பெண்ணொருவர் 2500 ரூபாய்க்கு விற்பனை செய்ததாகப் பாதுகாவலர்கள் தெரிவித்தனர்.

மரபணு பரிசோதனை செய்து இக் குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்காகச் சுனாமியின் போது காணாமற் போன பிள்ளைகளின் பெற்றோர்கள் வருமாறு அனோமா திஸநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

இச்சிறுமி சிறுவர் தேசிய பாதுகாப்புச் சபையின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளார். (ச-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19 03 1931

உதிர்வு 10 11 2010

திருமதி தங்கரூபம் குணசிங்கம்

அன்பே வடிவாய்
கருணையே உள்ளமாய்
தியாகமே வாழ்வாய்
பாசமே மூச்சாய்

வாழ்ந்து எம்மை ஆளாக்கி இறைவனடி சேர்ந்த
எம் குல விளக்கின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

"அருளகம்"
நெல்லியடி வடக்கு
கரவெட்டி

கணவன்
மகள், மருமகன்,
பேரன்

(3216)

செல்லா சினிமா (நாதன்ஸ்)
03.12.2010 முதல்
ஆர்யா, ஸ்ரேயா, சந்தானம் நடித்த



சிக்கு புக்கு
காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

## விற்பனைக்கு

251 - டொல்பின் கைறூப்
30 - செல்மொடல் கைறூப்
தொடர்பு :
குகரதி ரெக்ஸ் நெல்லியடி
T.P : 0776092213 (சி-1779)

## வடமராட்சியில் காணி விற்பனைக்கு

1) நெல்லியடி நகரில் 3 3/4 பரப்பு காணி
2) நெல்லியடி கொடிகாம பிரதான வீதியில் திரு இருதயக் கல்லூரிக்கு அண்மையில் வீட்டுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
3) மந்திகை வல்லிபுரக் கோவில் பிரதான வீதி அருகில் உடிய கதிர்காமத்தில் 8 1/4 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய மிகப்பெரிய வீடு விற்பனைக்குண்டு.

குறிப்பு : மேற்படி ஆதனங்களில் ஏதாவது ஒன்று மட்டும் அவசர தேவை கருதி உடன் விற்கப்படும். பொருத்தமானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

நேரடித் தொடர்புகளுக்கு : 021 3735292

"ஆச்சி துணை"
சம்பந்தர் கடை வீதி, கரவெட்டி மேற்கு.

(சி-1777)

Sale Sale Sale Sale

## மாபெரும் மலிவு விற்பனை



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு 01.12.2010 முதல் 01.01.2011 வரை சகல விதமான றெடிமேற் ஆடைகள். ஆண் பெண் இரு பாலாருக்கும் உரிய பாடசாலை சீருடை துணிவகைகள் என்பவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல : 021 222 2381 (சி-1703)

## இதோ முதன் முறையாக யாழ் மற்றும் வன்னி மாவட்டங்களிற்கான 2011 ஆம் ஆண்டிற்கான மாபெரும் வேலை வாய்ப்புக்கள்

யாழ் மற்றும் வன்னி மாவட்டங்களில் இருந்தும் அதிகமான பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை.

யாழ்.மற்றும் வன்னி மாவட்ட சகல பாகங்களிலும் இருந்தும் அதி சிறந்த நிதிசார்ந்த முன்னணி தனியார் கம்பனி (CIC Life) கிளைகள் சிலவற்றிற்கான பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்புத் திட்டம்

### வேலை வாய்ப்பிற்கான பதவி வெற்றிடங்கள்

1. விற்பனைத்துறை, அலுவலகத்துறை
2. விற்பனை நிறைவேற்று அதிகாரிகள்
3. விற்பனை ஆலோசகர்கள்
4. மேற்பார்வையாளர்கள்

போன்றோருக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பின்வரும் தகுதி உடையவர்கள் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளலாம்.

ஆண், பெண் இருபாலாரும்
வயது எல்லை - 18 : 50
அடிப்படைத் தகுதி - O/L கணிதம் உட்பட ஆறு பாடங்கள்
அத்துடன் வேறு தகைமைகள், முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது.

(சி-1770)

இடம் :- பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (M.P.C.S) யாழ்ப்பாணம்.
காலம் :- 11 ஆம் திகதி சனிக்கிழமை 2010
நேரம் :- காலை 9.30மணி தொடக்கம் 1.00 மணிவரை

## சென்றல் நேசிங் ஹோம்

350, பலாலி வீதி,
திருநெல்வேலி

யாழ் மக்களுக்கு ஒரு முழுமையான பற்சிகிச்சை நிலையம்
Dental Sugery

ஆரம்பம் - வெள்ளி (10.12.2010) முதல்

## Family Dental Care



1) Oral Medicine / Pathology
வாய் நோய் அறிதல்
2) Fixed Appliance
நிரந்தர கிளிப் போடுதல்
3) Light Cure Filling
லைற் கியூர் முறையில் பல் அடைத்தல்
4) Den tures
பல் கட்டுதல்



5) Crown and Bridge
நிரந்தர பல் கட்டுதல்
6) Tooth Implant
பல் நாட்டுதல்
7) Ultrasonic Scaling
அல்ரா சோனிக் முறையில் பல் சுத்தம் செய்தல்
8) Tooth Whitening
பற்களை வெள்ளையாக்குதல்



பார்வையிடும் நேரம்

திங்கள் முதல் சனி வரை மாலை - 4.00Pm - 7.30 Pm வரை
ஞாயிறு காலை - 9.00 Am - 12Pm வரை

பதிவுகள் வரவேற்புப் பகுதியில்
தொடர்புகளுக்கு - 021 222 2263

(3210)

வைத்திய பணிப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பேச்சும் பழக்கமும்

பேச்சுவார்த்தையொன்று நடந்து முடிந்தது. அதில் கலந்து கொண்ட ஒருத்தர் வெளியே வந்தார். முகம் ஒரு மாதிரியாக இருந்தது.

"என்ன சேர்... பேச்சுவார்த்தை எப்படி இருந்தது?" என்று கேட்டேன். அவர் கொஞ்சம் கடுமையாக என்னைப் பார்த்தார்.

"அங்கே என்ன பேச்சுவார்த்தையா நடந்தது? சொற்பொழிவல்லவா நடந்தது" என்றார்.

"ஏன் சேர் அப்படிச்சொல்கிறீர்கள்?" என்றேன்.

"பின்னே என்ன சேர்.... எங்களை எங்கே பேசவிட்டார்? அவர் மட்டும் தானே பேசிக் கொண்டிருந்தார். ஒருத்தரே பேசினால் அது எப்படி உரையாடல் ஆகும்? அது சொற்பொழிவு தானே" என்றார்.

அவர் சொல்வதும் நியாயம் தான்.

உரையாடல் என்பது ஒரு கலை.

உதைபந்தாட்டத்தை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அதில் எப்படி ஒருத்தரிடம் ஒருத்தர் பந்தை தள்ளிக்கொண்டே போய் கடைசியாக இலக்கை நோக்கி ஓங்கி அடிக்கிறார்கள்?

அதே மாதிரித்தான்..... உரையாடலிலும் எல்லோரும் பங்கு கொள்வது போன்று சமமான சந்தர்ப்பங்கள் கொடுக்க வேண்டும்.

அதை விட்டுட்டு, ஒருத்தரே, பேச்சு என்ற பந்தை தன்னுடைய நாக்கு என்ற மைதானத்தில் வைத்து விளையாடிக்கொண்டிருக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அது உரையாடல் இல்லை. அது சொற்பொழிவு தானே. எதிராளிக்கு அதனால் என்ன இன்பம் இருக்கப்போகிறது? எரிச்சல் தான் வரும். அதனால் தான் இவர் இப்படி என்னிடம் சொல்கிறார்.

ஒருவருக்கொருவர் எப்படிப் பேசிக்கொள்வது என்பதைக்கூட நம்ம ஆட்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஒருத்தரிடம் நாம் பேசும்பொழுது அவர் மீது நமக்கு அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்வது போன்று பேச வேண்டும்.

"என்ன.... எப்படி இருக்கிறீர்கள்?" என்று பிரியமாக ஆரம்பிக்கலாமே. மற்றவர்களை தாராளமாக பாராட்ட வேண்டும். அதுதான் எல்லாவற்றுக்கும் அத்திவாரம்.

யாரிடம் பேசுகிறோமோ அவருக்கு நாம் ஒரு நல்ல நண்பர் என்பதை காட்ட வேண்டும். அதற்குச் தகுந்தாற்போல் பேச வேண்டும். நடந்து கொள்ள வேண்டும்.

நேரில் நல்லவிதமாக பேசிவிட்டு அந்த ஆள் போன பின் 'அவன் கிடக்கிறான்' என்று நினைக்கக் கூடாது.

நம் எதிரில் உட்கார்ந்திருப்பவர் தன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ அதுசரிதான் என்பதை நாமும் ஒத்துக் கொள்ளவேண்டும். அவர் சொல்வதை ஆர்வமாகக் கேட்க வேண்டும். அதன்பின் மெதுவாக நாம் நினைக்கும் கருத்தை வலியுறுத்தலாம்.

இப்பொழுது நம்மை மற்றவர்கள் புகழவேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம் அல்லவா, இதே ஆசை மற்றவர்களுக்கும் இருக்குமல்லவா. அதனால் புகழ்வதற்கு தயங்கக் கூடாது. பொய்யாகப் புகழ்க்கூடாது. அவ்வளவுதான்.

ஒருத்தருக்கு தலைமுடியே இல்லை எனும் போது உங்கள் கூந்தல் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று சொன்னால் அதை புகழ்ச்சி என்று எடுத்துக் கொள்ளமாட்டார். அதைக் கிண்டல் என்றுதான் நினைப்பார்.

ஒது புதுக்கருத்தை நாம் சொல்லப் போகிறோம் என்றால் அதற்கு அவசரப்படக்கூடாது.

நிலத்தை உழுது பக்குவப்படுத்தியதன்பின் தானே நாற்று நடுகிறோம்.

அதேபோல் அவர்களுடைய மனத்தை பக்குவப்படுத்துவது மாதிரி பேசி அதன்பின் மெதுவாக நாம் நினைத்த கருத்தை எடுத்து வைக்க வேண்டும்.

குழப்பம் காரியத்தை கெடுத்துவிடும். அதனால் நாம் தெளிவாக இருக்க வேண்டியது முக்கியம்.

நாம் யாரிடம் பேசப் போகிறோமோ அவருக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்து கொள்வதைவிட அவருக்கு என்ன பிடிக்காது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

நிலைமை சரியில்லையானால் பேச்சையே ஆரம்பிக்கக் கூடாது. எப்போதும் நம்மைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிரயாத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அப்படியொரு நல்ல அபிப்பிராயம் உருவாகிவிட்டால் அதைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும்.

இப்படிப்பட்ட நுணுக்கத்தையெல்லாம் புரிந்து கொண்டால் தான் இந்த உலகத்தில் சுமுகமாக இருக்க முடியும். மற்றவர்களிடம் சரியாக பேசவும் பழகவும் தெரியவில்லையானால் என்ன பிரயோசனம்?

ரொம்ப நாசூக்காக பேசத்தெரிந்த ஒருத்தர் இன்னொரு நண்பரின் வீட்டுக்குப் போயிருந்தார். அவர் என்ன செய்தார் தெரியுமா? அவர்களுடைய வீட்டில் 15 நாட்களுக்கு முன் செய்து மீதமிருந்த பலகாரத்தை இவர்முன் கொண்டு வந்து வைத்து "எங்கள் வீட்டில் செய்தது. சாப்பிடுங்க சேர். சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்" என்றார்.

அவரும் வேறுவழியில்லாமல் சாப்பிட அரம்பித்தார். அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவர் எழுந்தார். "ஒன்றும் அபிப்பிராயம் சொல்லாமல் போகிறீர்களே.... சேர்" என்றார் இவர்.

இதற்கு அவர், "இன்றைக்கு நமக்குள் ஏற்பட்ட இந்தச் சந்திப்பு, ஒரு 15 நாளைக்கு முன் நடந்திருந்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்" என்று சொல்லிவிட்டு வயிற்றை அழுத்திப் பிடித்துக்கொண்டு அவசர அவசரமாக நடையைக் கட்டினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.பல்கலைக்கழகம் சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்தப்படும்

## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழகம் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்தப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் உயர் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெற்கிலுள்ள பல்கலைக்கழங்களை அரசாங்கம் அபிவிருத்தி செய்கிறது. ஆனால் யாழ்.பல்கலைக்கழகத் தை இந்த அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து ஒதுக்கியுள்ளது எனக் கூறினார்.

அதற்கு பதிலளித்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, யாழ்.பல்கலைக்கழகத்தை அரசாங்கம் ஒதுக்கவில்லை எனவும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அப்பல்கலைக்கழகம் சர்வதேசதரத்திற்கு உயர்த்தப்படவுள்ளது எனவும் கூறினார். (ஸ்ரீ-2)

### யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு

## இலகு தவணைக்கட்டண அடிப்படையில் உழவியந்திரங்கள் வழங்கல்

யப்பான் ஜென் உதவி திட்டத்தின் கீழ் கமநல அபிவிருத்தி அமைச்சினால் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு ஜப்பான் தயாரிப்பினால் ஆன 70, இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் 36 மாத இலகு தவணைப்பண கட்டண அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இவ்உழவு இயந்திரத்தை பெற விண்ணப்பிக்கும் விவசாயிகள் முழு நேர விவசாயியாகவும் விவசாய சம்மேளன அங்கத்துவத்தை பெற்றவராக இருப்பதுடன் தவணைக்கட்டணத்தை உரிய காலத்தில் செலுத்தக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் இரண்டு சில்லு உழவு இயந்திரங்களை பெற ஆர்வமுடைய விவசாயிகள் தமது பிரதேச எல்லைக்குட்பட்ட கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு விண்ணப்பிக்குமாறு கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மானிய அடிப்படையில் கன்னிப்பசு வளர்ப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம் செயற்கை முறை சினைப்படுத்தல் சேவை மூலம் பிறக்கும் பசுக்கன்றுகளுக்கு 18 மாதம் வரை புதிய மானியத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைய பிறக்கும் நாகு கன்றுக்கு 18ஆயிரத்து 482 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்படஉள்ளன. எனவே மாடு வளர்க்கும் பண்ணையாளர்கள் செயற்கை முறை சினைப்படுத்தல் சேவையை மேற்கொண்டு உரிய பலனைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை உரிய கால்நடை வைத்திய பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி யாழ்ப்பாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர் திருமதி. வ.அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 130 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 110 |
| தக்காளி | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 |
| கோவா | 80 | 60 |
| கரட் | 100 | 70 |
| பூசணி | 50 | 50 |
| புடோல் | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 170 | 130 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 |
| பாகற்காய் | 240 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 40 |
| பயற்றங்காய் | 240 | 150 |
| லீக்ஸ் | 140 | 100 |
| பீற்றூட் | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 150 |
| முருங்கைக்காய் | 200 | 250 |
| போஞ்சி | 140 | 90 |
| கத்தரிதம்புள்ள | 180 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 40 |

# இராசி பலன்

*10.12.2010*
*(கார்த்திகை 24, வெள்ளிக்கிழமை)*
*பஞ்சமி பின்னிரவு 2.31 மணி வரை*
*திருவோணம் பின்னிரவு 12.15 மணி வரை*
*இராகுகாலம் 10.49-12.19 மணி வரை*
*சுபநேரம் 6.19-7.49 மணி வரை*
*இராமநாதர் குருபூசை.*

**மேடம்** பொன்னான செய்திகள் வந்து சேரும் நாள், தடைப்பட்ட காரியம் கைகூடும், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டின் மூலம் ஆனந்தமடைவீர்கள்.

**இடபம்** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், வருமாணம் உழைக்கும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள்.

**மிதுனம்** தொழில் வளர்ச்சியில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கூடிய கவனம் தேவை.

**கடகம்** எதிர்கால நலன் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உறவினர் வருகையுண்டு, தனவரவு திருப்திகரமாக அமையும்.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், தொழில் வளர்ச்சியேற்படும்.

**கன்னி** எதிர்பார்த்த தனவருவாய் இல்லம் தேடி வரும், சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சுமுகமாக முடியும், புத்திரர் வழியில் நன்மையுண்டு.

**துலாம்** புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், தாய்வழி அனுகூலமுண்டு, உறவினர் நலன் கருதி சில செலவுகளைச் செய்ய நேரிடலாம்.

**விருச்சிகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, சுவாரஸ்யமான நாள், தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், விவாகப் பேச்சுக்கள் முடிவாகலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** திடீர் பயணமுண்டு, பெரிய மனிதரின் சந்திப்புக்கள் கிட்டலாம், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** ஒரு வேலையை முடிக்க ஒரு தடவைக்கு இரு தடவை அலைய நேரிடலாம், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள்.

**மீனம்** செல்வாக்கு மேலோங்கும், மாலையில் பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் விரும்பியபடியே நடைபெறும், பொருளாதார நிலை உயர்வடையும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம், உரிமை அடிப்படையில் எல்லோரும் சமமானவர்களே

ஒரு மனிதனுடைய உறுதிப்பாட்டுக்கும் நல் வாழ்வுக்கும் தனிப்பட்ட அபிவி ருத்திக்கும் உள்ள உரிமை தான் அடிப்படை மனித உரிமையாகும். இதனை நல்லொழுக்கம், சட்டம் என்ற வகையில் சமூகமும் அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது. எல்லோருக்கும் அடிப்படை உரிமை பொதுவாகும். அதனை அனுபவிப்பதற்கு மனிதனுக்கு உரிமை உள்ளது. மேலும் ஆண், பெண் வேறுபாடின்றி அந்த உரிமை கிடைக்க வேண்டும்.

இரண்டாம் உலகப் போருக்கு முன் நடைபெற்ற யெஹூதி இனத்தின் இனச் சுத்திகரிப்பு மற்றும் அமெரிக்க, ஜப்பானின் ஹிரோசிமா, நாக்சாசி நகரங்கள் மீது வீசப்பட்ட அணு குண்டினால் எழுந்த அழிவின் தாக்கத்தின் பின் உலகில் பல நாடுகள் அதுமாதிரியான நிகழ்வு ஒன்று மீண்டும் நடந்து விடக்கூடாது என்று அவதானித்தமை போன்றவற்றின் அடிப்படையிலேயே அடிப்படை மனித உரிமை பற்றி உலக நாடுகள் கவனம் செலுத்த ஆரம்பித்தன.

இதனைக் கருத்திற் கொண்டு 1945 ஆம் ஆண்டு சென். பிரான்சிஸ்கோவில் ஐ.நா.வின் பிரகடனம் பிரசுரிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் சமூக, பொருளாதார செயற்குழு மூலம் மனித உரிமைக்கான ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு ஆனி மாதம் மனித உரிமைக்கான பிரபஞ்ச பிரகடன அறிக்கை தெளிவாக உருவாக்கப்பட்டது.

அதன்பின் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மனித உரிமைக்கான சர்வதேச பிரகடனம் பிரசுரிக்கப்பட்டது.

இப்பிரகடனமானது உலக விடுதலை, நீதியும் சமாதானமும், கௌரவம், மாற்ற முடியாத சமவுரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டமை, தன்னம்பிக்கை, வேறுபட்ட நாடுகளில், தேசங்களில் வாழ்ந்தாலும் சமவுரிமை வழங்கப்படல், பல இன, மத, சமூக கேந்திரமானாலும் சமவுரிமை வழங்கப்பட்டமை, பால் பேதமின்றி கவனித்தல் போன்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மனித உரிமை சர்வதேச அறிக்கையின் முதலாம் வாக்கியம் "எல்லா மனிதர்களும் சுதந்திரமாகப் பிறந்துள்ளனர். கௌரவம், உரிமை அடிப்படையில் எல்லோரும் சமமானவர்களே. நீதி நேர்மை என்பவற்றின் உணர்வுடனும், மனச்சாட்சியின் அடிப்படையிலும் அவர்களை சகோதர உணர்வுடன் கவனிக்கப்பட வேண்டும்" என்று அமைந்துள்ளது.

## இன்று சர்வதேச மனித உரிமைகள் தினமாகும்

**அடிப்படை மனித உரிமை சர்வதேச பிரகடனத்தின் விசேட உரிமைகளாவன,**

பாதுகாப்பான இடம் கிடைப்பதன் சுதந்திரம் (14 பகுதி), நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் மனச்சாட்சி சம்பந்தப்பட்ட சுதந்திரம் (18 பகுதி) , கலாசார உரிமை (பகுதி 18), முறையா சட்டம் நடவடிக்கை சம்பந்தமான உரிமை, கௌரவமாக மதிக்கப்படுதல் (சட்டத்தின் முன்னால் சமம் என்பது 1,2பகுதி), அடிமைத்துவத்தின் கடும் வேதனை மேலும் தாழ்த்தப்படுவதில் இருந்து மீள்வதற்கான உரிமை (பகுதி 4-5), கூட்டம் நடத்துதல், சங்கங்கள் அமைத்தலுக்கான உரிமை (பகுதி 20), சொத்துக்கள் சம்பந்தமான உரிமை (பகுதி 17), புலமைச் சொத்துக்கான உரிமை (27), நீதியும், நேர்மையும் நிலைநாட்டும் உரிமை (பகுதி 8-10), கல்வி , அறிவு சார்ந்த உரிமை( 26 பகுதி), திருமணம், குடும்பம் அமைப்பதற்கான உரிமை (16 பகுதி), இன தனித்துவத்திற்கான உரிமை(15), கருத்துச் சுதந்திரம் ,பேச்சு சுதந்திரம், தகவல் வழங்குவதற்கும், பெறுவதற்குமான சுதந்திரம் (19 பகுதி), தனிப்பட்ட வாழ்க்கை, இரகசிய தன்மைக்கான சுதந்திரம் (12 பகுதி), கேள்வி கேட்கும் உரிமை (19-21 பகுதி), மதம், சிந்தனை, மனச்சாட்சியுடன் நடப்பதற்கான உரிமை(18 பகுதி), சமூக பாதுகாப்புக்கான உரிமை (2 பகுதி), உள், வெளி நாடுகளில் பயணிக்கும் சுதந்திரம் (13 -பகுதி), தொழில் சங்கம் உருவாக்குவதற்கான உரிமை (23 பகுதி), வாக்குரிமை, அரச வேலைகளில் ஈடுபடும் உரிமை (21 பகுதி) , தொழில்புரிதல், ஊதியம் பெருகுதல், சமூகசேவை, பாதுகாப்பு, சிறியோருக்கும் உதவி வழங்குதல், பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை (23-25 பகுதி), மேலதிக அல்லது விசேட அடிப்படை உரிமை பாதுகாப்பு (28-29 பகுதி), மனித உரிமைகள் பாதுகாப்பதற்கான வேறுஎதிர்பார்ப்பு (28-30 பகுதி), விடுமுறையும் ஓய்வு பெறுவதற்குமான உரிமை (24 பகுதி என்பனவாகும்.

**அடிப்படை மனித உரிமையானது**

பாரம்பரிய உரிமை, சட்டரீதியான உரிமை என இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**பாரம்பரிய உரிமை**

*இது இயற்கையான உரிமை என்றும் அழைக்கலாம்.*

- வாழ்வதற்கான உரிமை
- நேர்மை
- சுதந்திர உரிமை
- பாரம்பரியத்தை பாது காக்கும் உரிமை
- பண்புகள் பாதுகாக்கும் உரிமை
- சொத்துரிமை
- பழக்கவழங்கங்கள், நம்பிக்கையை பாதுகாக்கும் உரிமை.

**சட்டரீதியான உரிமை**

எந்த ஒருவிதமான மனித வேண்டுதல் சட்டமாக்கப்படுவது அதற்கு சட்ட ரீதியான வரவேற்பு அரசின் மூலம் கிடைத்த பின்பே அது முறியடிக்கப்பட்டால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கமுடியும். சட்ட ரீதியான உரிமைகளாவன

- சிவில் உரிமை

சு.தி.விமலன், M.A,Dip-in-H.R
சமாதான நீதவான்,
மனித உரிமைகள் நிறுவனம்,
யாழ்.மாவட்டம்.

- அரசியல் உரிமை
- பொருளாதார உரிமை
- கலாசார உரிமை
- சமூக உரிமை

**மனித உரிமைகள் இன்றைய சமூகத்துக்கு**

சமூக அபிவிருத்திக்கு, தனிநபர் அபிவிருத்திக்கு, நற்குண, நல்லொழுக்க சமூகம் உருவாக்குதல், ஜனநாயக பாதுகாப்பு, நல்லொழுக்கம் நிலைநாட்டுதல், புரிந்துணர்வு உபகாரம் பண்ணுதல் போன்றவற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.

இவை கடந்த காலங்களில் நல்ல நிலையில் இருந்தது. ஆனால் இன்று இது சிறிதுசிறிதாக வீழ்ச்சி அடைந்து செல்கிறது.

இதற்கு அதிக சனத்தொகை, சமூகப் பிரச்சினை, வரையறுக்கப்பட்ட வளம், மனிதன் மத்தியில் கௌரவம் இல்லாமல் போனது, மனநோய் பிரச்சினை, ஜனநாயகம் அழிந்தமை என்பனவே காரணிகளாக அமைந்துள்ளன.

## வரணி மண்தந்த வரலாற்று நாயகி



தமிழர்களின்கலாசாரதலைநகராம் யாழ் நகரின் தென்மராட்சி பகுதியில் வரணிஎன்னும்பேரூரிலேபிறந்துவிஞ்ஞான பாட ஆசிரியையாகி கடந்த 35 வருடங்களாகதமிழர்சந்தித்தஅனைத்து துன்பதுயரங்களில்பங்கெடுத்துமாணவரின் அறிவுத் தேடலுக்கு உரமூட்டிய வரலாற்று நாயகி திருவாட்டி திலகவதி இந்திரராசா அவர்களின் பணியை பாராட்டுவதில் புலகாங்கிதம் அடைகின்றேன்.

ஒரு குருவின் கற்பித்தல் பணி என்பது இவரால் வளர்க்கப்பட்ட விழுதுகளில் தெரியும். இன்று உலகமெல்லாம் கிளை பரப்பி வரணி மண்ணின் பெருமைகளை அறிவு ரீதியாக பறைசாற்றும் மாணவ சமூகத்தின் ஆணி வேராக விளங்கியவர். ஆளுமை அன்பு அர்ப்பணிப்புடன் கூடிய கண்டிப்பினால் வளர்க்கப்பட்ட மாணவ சமூகமே இன்று இவரது சேவையை பறைசாற்றி நிற்கின்றது. இப் பெரும் நாயகியை பாராட்டுவதற்கு அப்பால் அவரை வாழ்த்துவது எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகின்றேன். இவர் வாழ்நாள் பூராக வரணி மண்ணுக்கு வழிகாட்டியாக வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

சி.சிறிதரன் நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## சமூகப் பணி தொடர வாழ்த்துக்கள்



வடபுலத்திலே தென்மராட்சிப் பதியிலே வரணிக்குறிச்சிகல்வியில்எழுச்சிகண்ட ஒரு வரலாறு உண்டு. கலை, கல்வி, கலாசாரத் துறைகளில் மட்டுமில்லாமல் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் மண்ணின் மைந்தர்களான மாணவர்களை வளர்த்து விட வேண்டும் என்ற பேரவாவோடு ஆசிரியை இன்று தனது பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். ஏறத்தாழ 35 ஆண்டுகளாக தான் ஆற்றிய சேவையினை நிறைத்துக் கொண்டு ஓய்வு பெறும் என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியை திலகவதியை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

வரணிமகாவித்தியாலயம்மிகத்துரிதகதியில்முன்னேறிவருவதற்கு திருமதிதிலகவதிஅவர்களின்பணிபெரும்பங்குவகித்தது என்பதைநான் அறிவேன். எதையும் ஏன், எப்படி, எதற்கு என்று காரண காரியத்தைத் தேடிக் கொண்டே விஞ்ஞான ரீதியாகச் சிந்திக்கும் அவரது ஆற்றலை நான் அவதானித்துள்ளேன். திருமதிதிலகவதி அம்மையார்ஓய்வுபெறும் காலத்தில்நல்லாரோக்கியசுகவாழ்வுடன் வாழ்ந்து தன் ஓய்வுக் காலத்திலும் வரணி சமூகத்திற்குஅவர் பணிதொடரவேண்டும்எனவாழ்த்துகின்றேன்.

கலாபூசணம், செஞ்சொற் செல்வர், சைவப் புலவர்
திரு.எம்.சி.எல்.சிறிதயாளன் JP
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் - யாழ். கல்வி வலயம் மற்றும் துணைப் பணிப்பாளர் இந்து நாகரிக அமைச்சு

## 35 வருட ஆசிரிய சேவையில் இருந்து விடைபெறும் திருமதி திலகவதி இந்திரராசா



**ஆசிரிய பணியில்.....**

**பிறந்த திகதி - 08.12.1951**
**பிறந்த இடம் - மந்துவில் கொடிகாமம்**
**கல்வித் தகைமை - S.L.T.S - 1**
**முதல் நியமனம் - யா/வரணி மகா வித்தியாலயம் (22.04.1974)**
**ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி - 01.07.1979**
**யாழ்.மந்துவில் ஸ்ரீபாரதி - 01.07.1982 - 31.08.1985**
**யா/வரணி மகா வித்தியாலயம் - 01.09.1985 - 07.12.2010**
**பகுதித் தலைவர் - (1998 - 2010)**

## அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஆசிரியை



தன்னுடைய வாழ்வின் பெரும் பகுதியை ஆசிரியச் சேவைக்காகவும் யா/வரணி மகா வித்தியாலயத்திற்காகவும் அர்ப்பணித்திருக்கும் ஆசிரியை திருமதி திலகவதி இந்திரராசா அவர்களை வாழ்த்துவதில் உளப்பூரிப்படைகின்றேன். தன்னிடம் மலர்வதையும் கனிவதையும் கொடுத்து விடும் ஒருமரத்தைப்போலஆசிரியை அவர்களை இந்நாளில் காண்கிறேன்.

பாதைகளும் பயணங்களும் அவரவர் பாதங்களுக்குக் கீழ்த்தான் இருக்கின்றன. முடிந்தால் நட இல்லையேல் விலகிக் கிட என்றார் அறிஞர். ஆனால் பள்ளி வாழ்க்கை என்கிற போது சுறுசுறுப்பு, தன்னியல்பு, நம்பிக்கை, ஆரம்பிக்கும் ஆற்றல் போன்ற முக்கியமான உணர்வுத் தொகுதிகளைக் கொண்ட மாணவ பராயத்தினரது ஆளுமை அடையாளத்தை விருத்தி செய்து இல்லை, இயலாது, முடியாது என்பதைத் தவிர்த்து ஆம்-முடியும்- முயற்சிப்போம் என்று அவர்களை நடக்க வைப்பது சவாலானது. இருந்தும் ஆசிரியை திருமதி திலகவதி இந்திராசா அவர்கள் நன்றே வடிகால் செய்திருக்கிறார். அதன் வழி பாய்ந்து மாணவர்கள் பெரும் விளைச்சல் தந்திருக்கிறார்கள்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன்
நாடாளுமன்ற உறுப்பினர்

## நீடூழி வாழ வாழ்த்துக்கள்



விஞ்ஞானஉலகில்தவழ்வதற்கு 35வருடங்களாய் மாணவர்களை உருவாக்கிய பெருமைகொண்டவர்எமதுஆசிரியைதிருமதி திலகவதி இந்திரராசா தனது அர்ப்பணிப்புமிக்க பணியை யாழ்/வரணி மகாவித்தியாலயத்தில் தொடர்ந்தவர். தற்போது ஓய்வு பெறுகின்றார். அவரின் சேவைக்கு நன்றி என்ற வார்த்தை இணையாகாதது ஒன்று.

மண்ணில் பிறக்கும் பிள்ளையின் வளர்ப்பு அன்னையின் கையில் இருந்தாலும் அனைத்து மாணவர்களையும் தன் பிள்ளைகளாய் கருதி அன்பாகவும் கண்டிப்பாகவும் வழிநடாத்தினார். சந்தேகங்கள் என்றால் சந்தோசமாய் விளங்க வைப்பதனையும் எதனையும் செயல் முறைகளோடு கற்பிக்கும் ஆற்றலையும் எம்மால் என்றுமே மறக்க முடியாது.

ஒவ்வொரு வருடமும் மாணவர் பிரிவொன்றை அவர் சந்தித்திருந்தாலும் இன்று இவர் ஓய்வு பெறுவது வரணி சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் பேரிழப்பாகும். எம் ஆசிரியை எதிர்காலத்தினை குடும்பத்தினரோடு இன்பமாக களிப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய வேண்டும் என பிரார்த்தித்து அவரை நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம் (சி-1780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

# புலமைப்பரிசில் பாராட்டு விழா

## சிறப்பு மலர் -10.12.2010



2008 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் பிரதி அதிபர், ஆசிரியர்களுடன்




2009 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் பிரதி அதிபர், ஆசிரியர்களுடன்



**2010 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் பிரதி அதிபர் ஆசிரியர்களுடன்**

## பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியின் புலமைப் பரிசில் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெரும் இடர்கள், இழப்புக்கள் மத்தியிலும் தம் கல்வியிலேயே உயர்ந்து சாதனை படைத்திருக்கும் மாணவர் களைப் பாராட்டி இவ் விழா எடுக்கப்படுகின்றது. கடந்த மூன்று ஆண்டு களிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி இடர்கள், நெருக்கடிகள், இடப்பெயர்வுகள் என தொடர்ச்சியான துன்பங்களைச் சந்தித்த போதும் தமது கல்வியிலே உயர்ந்து இப்பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்

எனவே இப்பாராட்டு விழா சிறப்பாக நடைபெறக்காரணமாக அமைந்த அனைவரையும் பாராட்டுகின்றேன்.

*திரு.க.இரத்தினகுமார்,*
*பிரதிக்கல்விப் பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.*

## கல்விப் பணிப்பாளரின் ஆசிகள்




1984 ஆம் ஆண்டு முதல் கிளிநொச்சி மாவட்டம் தனி மாவட்டமாக உருவெடுத்ததிலிருந்து பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது. குறிப்பாக எழுச்சியும், வீழ்ச்சியும் நிறைந்த ஆண்டுகளாகவே கழிந்தன. இச் சூழ்நிலைகளுக்கு முகம் கொடுத்து மாவட்டத்தில் கல்வித்தரத்தை மேம்படுத்துவதில் கல்வியியலாளர்கள், அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அரும்பாடுகள் புரிந்துள்ளனர். மாவட்டம் வெள்ளி விழாக்காணும்போது எமது கல்விச் செயலொழுங்கு நலன்புரி நிலையங்களில் நகர்ந்து கொண்டிருந்தன. தொடர்ந்து இவ்வாண்டுத் தொடக்கத்தில் படிப்படியாகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாற்றங்கள் அனைத்திற்கும் உட்பட்டு கலவிச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் கிளிநொச்சி மத்திய கல்லூரியும் தம் பணியை வீச்சாக்கி நிற்கிறது. அதற்கு முன்னுதாரணமாக இந்த மாணவச் செல்வங்கள் இனறு மதிப்பளிக்கப்படும் நிகழ்வு அமைந்திருக்கிறது.

எமது பிள்ளைகளின் அழியாச் சொத்தான கல்வியை மேலோங்கச் செய்வதற்காக இரவு பகலாக இந்த ஆசிரியர்களும் அதிபரும் பெற்றோரும் பாடுபட்டுள்ளனர். நலன்புரி நிலையங்களில் இருந்த காலத்தில் பல்வேறு ஆசிரியர்களிடம் கற்றுத்தேர்ந்தவர்களும் இன்று பாராட்டப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவர்களை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வழிப்படுத்திய அனைவரையும் பாராட்டுகின்றேன். நவீன உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கத் தக்க தகவல் தொழில்நுட்ப புலமையாளர்களாக அனைவரும் வளம்பெற வாழ்த்துகின்றேன்.

*த. குருகுலராசா,*
*வலயக் கல்விப்பணிப்பாளர்,*
*வயலக்கல்வி அலுவலகம்,கிளிநொச்சி.*

## பிரதி அதிபரின் எண்ணத்திலிருந்து...



எமது கல்லூரி இவ் வருடம் 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதற்காக புலமைப் பரிசில் பாராட்டு விழாவினை நடாத்துகின்றது.

இன்னல்களும்; இடர்களும் நிறைந்த காலங்களில் கல்வியில் சிறப்படைந்த இவர்களின் ஆவணமாக இவ்விழா என்றும் விளங்கும்.

மேலும், பாராட்டுவிழா சிறப்புற நடைபெற உதவியோர்களுக்கு எனது நன்றிகளும், பாராட்டுக்களும்.

*ஆ.ஆலாலசுந்தரம்,*
*பிரதி அதிபர்,*
*கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி,*

*இடம்: கல்லூரி பிரதான மண்டபம்*
*காலம்: 10.12.2010 (வெள்ளிக்கிழமை)*
*நேரம்: முற்பகல் 9.00 மணி*

**முதன்மை விருந்தினர்**
*திரு.த.குருகுலராஜா*
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

**சிறப்பு விருந்தினர்கள்**
*திரு.க. இரத்தினகுமார்*
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,(மாணவர் அபிவிருத்தி)
வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி
*திரு.சி.கணேசலிங்கம்*
உதவிக்கல்விப் பணிப்பாளர், (ஆரம்பக்கல்வி)
வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி

**விருந்தினர்கள்**
*திரு.நா.சோதிநாதன்*
முன்னாள் அதிபர்,
(கிளி/ கிளிநொச்சி மத்தியகல்லூரி)
*திரு.பொ. விஜயநாதன்*
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி
*திருமதி. வ.சுப்பிரமணியம*
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம் கிளிநொச்சி

மேற்படி நிகழ்வில் தங்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

விழாக் குழுவினர்.

## விழாக்காணும் சிட்டுக்களை வாழ்த்துகிறேன்



மனித வாழ்வியலுக்கு அடித்தளமாகவும், ஆணிவேராகவும் இருப்பது கல்வி.. அந்த வகையில் எமது மாவட்டச சிறார் களையும் உலக ஒழுங்கில் வளம்பெறும் நோக்கில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை யாவரும் அறிந்ததே.

கிளிநொச்சி வலயம் கடந்த காலப் போர்ச்சூழலில் பல சாதனைகளைப் புரிந்து 2007 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் தேசிய நிலையில் தமிழ் மொழி மூலம் முதலாம இடத்தைப் பெற்றமை மனங் கொள்ளத்தக்கது. இக்காலத்திலும், தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் மிகுந்த நெருக்கீடுகளின் மத்தியில் எமது மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதீதமான செயற்பாடுகளை அனைவருமே அறிவர்.

2008, 2009, 2010 காலத்தில் பௌதீக வளங்கள் சீரகுலைந்து அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இக் கல்லூரியில் நிறை வான அர்ப்பணிப்புடன் கடின சேவையாற்றிப் பெருந் தொகையான சாதனையாளர்களை உருவாக்கியுள்ளனர். இவர்களைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். இதில் முதன்மையாகச் செயற்பட்ட ஆசிரியர் திரு.ப.சசிறதன் உள்ளிட்ட தரம் 5 இற்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இன்று தகைமைத்திறன் மிக்கவர்களாக காட்சியளிக்கும் சிறார்கள் மேலும் பல தகுதிப்பாடுகளை அடைந்து கல்விமான்களாக மிளிர வேண்டும். அதற்கான அனைத்து வளங்களும் கிடைக்க இறைவனின் நல்லாசிகளை வேண்டுகின்றேன்.

*சி.கணேசலிங்கம்,*
*உதவிக்கல்விப்பணிப்பாளர்.*
*வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.*

## பிரதி அதிபரின் உள்ளத்தில் இருந்து...



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கு முகமாக புலமைப பரிசில் விழா நடைபெறுகின்றது.

எந்தவொரு செயற்பாட்டுக்கும் அத்திவாரம் மிகச்சிறப்பாக அமைய வேண்டும். அந்த வகையில் பாடசாலைகளிலும், ஆரம்பப்பிரிவு மாணவர்களை மிகச் சிறப்பாக வளர்ப்பதன் மூலம் நாளைய நாயகர்களை உருவாக்க முடியும்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியைப் பொறுத்தவரை கல்லூரி மாணவர்களின் வாழ்வாதார நிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அத்துடன் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர்களின் நிலையும் வறியதாகவே உள்ளது. இந் நிலையில் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து சகல உடைமைகளையும் இழந்து பௌதீக வளங்களும் சீர்செய்யப்படாத நிலையிலேயே கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

வளர்ந்து வரும் இந்த விஞ்ஞான யுகத்திலே மாணவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்கேற்ப ஆற்றல்களை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்திற்குரியது. சந்தர்ப்பங்களை நழுவ விடாது கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சகலரின் ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வளப்படுத்த வேண்டும் என உளமார வேண்டுகின்றேன்.

*திருமதி கெங்காதேவி ஜெயராஜ,*
*பிரதி அதிபர்*
*கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி*

**கல்லூரிச் சமூகம்**
**கிளி/கிளிநொச்சிமத்திய கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மிருசுவில் புனித சென்.நீக்கலஸ் ஆலயத்திரு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருச்சொரூப பவனி இடம்பெறுவதையும் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மிருசுவில் செய்தியாளர்)

## வடக்கு - கிழக்கில் அகழ்வாராய்ச்சி பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன

வடக்கு -கிழக்கில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பணிகளுக்கு அரசாங்கம், யுனெஸ்கோ மற்றும் தனியார் நிறுவனங்கள் நிதி உதவிகளை வழங்கவுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார். குச்சவெளி மற்றும் திரியாய் போன்ற பிரதேசங்க்ளில் மிகவும் முக்கியமான மதப் பொக்கிஷங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மரபுரிமைகளை அடுத்தத் தலைமுறையினருக்கு பாதுகாக்க வேண்டியது தமது கடமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 381 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழக பிரவேசத்திற்கு தகுதி

(கொழும்பு)

நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய 2 இலட்சத்து 30 ஆயிரத்து 237 பேரில் ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 381 மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். பாடசாலைகளிலிருந்து தோற்றிய ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 256 மாணவர்களும் தனிப்பட்ட ரீதியில் தோற்றிய 22 ஆயிரத்து 125 மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் உயிரியல் பிரிவில் 21 ஆயிரத்து 459 மாணவர்களும் கணிதப் பிரிவில் 12ஆயிரத்து 606 மாணவர் களும் வர்த்தகப்பிரிவில் 35 ஆயிரத்து 571 மாணவர்களும் கலைப்பிரிவில் 72 ஆயி ரத்து 745 மாணவர்களும் தகுதி பெற்றிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் 4ஆயிரத்து 384 பேர் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர். உயிரியல் பிரிவில் 367 மாணவர்களும் கணிதப் பிரிவில் 404 மாணவர்களும் வர்த்தகப் பிரிவில் ஆயிரத்து 576 மாணவர்களும் கலை பிரிவில் 2 ஆயிரத்து 37 மாணவர்களும் திறமைச் சித்தி பெற்றுள்ளனர்.

அதேநேரம் உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 23 ஆயிரத்து 420 பேர் சித்தியடையவில்லை.

பாடசாலைகளிலிருந்து தோற்றிய 19 ஆயிரத்து 788 மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 3 ஆயிரத்து 632 பேரும் சித்தியடையவில்லையென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுமங்கலி சிவகுமார் கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் ஆறாவது இடத்தையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த தெய்வேந்திரன் பிரணவன் ஒன்பதாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

உயிரியல் பிரிவில் யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பாலகோபாலன் கோகுலன் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் மட்டக்களப்பு சென். மைக்கல்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சஞ்சீவன் ஆறாவது இடத்தையும் பெற்றுள்ளனர். (ஸ்ரீ-2)

## புலம்பெயர்ந்தோரின் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவிக்கவேண்டாம்

### ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன்



லண்டனில் நடைபெற்றுள்ள ஆர்ப்பாட்டங்களின் பின்னணியை ஆராயாமல் அவற்றை விமர்சனம் செய்வதன் முலம் ஜனாதிபதியை சந்தோசப்படுத் துவதற்கு புதிதாக அரச தரப்பிற்கு சென் றுள்ள சில தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக் கின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆர்ப்பாட்டங்கள் இங்கு வாழும் தமிழர்க ளுக்கு எதிராக சிங்கள மக்களை திருப்பிவிடும் என்று எச்சரிக்கும் இவர்களது கருத்துக்கள் சிங்கள ஊடகங்களில் பெரிதுபடுத்தப்பட்டுள்ளன. உண்மையில் தமிழ் அரசியல்வாதிகளின் வாய்மூலமாக இத்தகைய கருத்துக்கள் வெளியாவதுதான்,சிங்கள மக்கள் மத்தியில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

லண்டனில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில் எந்தவிதமான அடிப்படைத் தெளிவும் இல்லாமல், தங்களது அரசியல் தேவைகளுக்காக இத்தகைய பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவிப்பதை இந்நபர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், லண்டனில் வாழும் இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாவர். இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பிலே அக்கறை காட்டுவதற்கும் ஆர்ப்பாட்டங்கள் செய்வதற்கும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை மக்களுக்கு முழுமையான உரிமைகள் இருக்கின்றன. லண்டன் ஆர்ப்பாட்டத்தில் ஒருபிரிவு சிங்கள மக்களும் கலந்து கொண்டதாக வெளி விவகார அமைச்சர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் இலங்கையிலும் நடைபெறுகின்றன. இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு தலைவர்களுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களை அரச தரப்பு அமைச்சர்களே நடத்தியுள்ளார்கள்.கடந்த காலத்தில் இலங்கை வந்திருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தாக்கப்பட்டார். இந் நிகழ்வும் அவ்வேளையில் நடைபெற்ற இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் நடைபெற்றது. எனவே இத்தகைய சம்பவங்களை இலங்கை வரலாற்றில் தொடர்ச்சியாக பார்த்திருக்கிறோம்.

ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் யூனியன் உரை இரத்து செய்யப்பட்டது தான் பார தூரமானதாகும். இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டதற்கான பின்னணியை ஆராய வேண்டும். இம்மாதிரியான சூழல் நிலவுகின்ற வேளையிலே இலங்கை ஜனாதிபதி எந்த அடிப்படையில் லண்டனுக்கு சென்றார் என்பது ஆராயப்படவேண்டும். ஜனாதிபதியை லண்டனுக்குச் செல்லுமாறு ஆலோசனை கூறியவர்கள் எவர் என்பதையும் ஜனாதிபதியை லண்டனுக்கு வரவழைத்து அவமானப்படுத்தியவர் யார் என்பது பற்றியும் ஆராயப்பட வேண்டும். டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவையும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவையும் கரு ஜயசூரியவையும் விட்டு விட்டு அரசாங்கத்திற்குள்ளே இருந்தபடி ஜனாதிபதிய்ய சிக்கலில் மாட்டிவிட்டுள்ள குழுவை அரசாங்க கட்சிக்காரர்கள் கண்டு பிடிக்க வேண்டும்.

கொழும்பில் இன்று தமிழ்,முஸ்லிம் மக்கள் அகற்றப்படு... செய்யப்பட்... சுமார் 60 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. வரவு -செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை. தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை எதிர்வரும் மாதங்களில் முழு மலையகமும் எதிர்நோக்கியிருக்கின்றது. இத்தகைய எரியும் பிரச்சினைகள் தொடர்பில் தாங்கள் இணைந்துள்ள அரசாங்கத்திடம் ஏற்றுக் கொள்ளத் தக்க பதில்கள் இருக்கின்றனவா என்று இந்த அரசியல்வாதிகள் தேடி மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த மக்களை முட்டாள்கள் என்று சொல்வதற்கு முன்னர் இந்த அரசியல் வாதிகள் இவற்றை உள்ளூரில் செய்ய வேண்டும். (ஸ்ரீ-2)

## புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தொடருமாறு ஐ.தே.க. கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக சாதாரண சட்டத்தின் கீழ் வழக்குத் தொடருமாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை அகற்றி சாதாரண சட்டத்தின் கீழ் குறித்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என் குறிப்பிட்டுள்ளார்.

குமரன் பத்மநாதனிடம் பாரியளவு சொத்துக்கள் காணப்படுவதாக அரசாங்கம் முன்னர் தெரிவித்த போதிலும் இதுவரையில் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் குமரன் பத்மநாதனின் சொத்து விபரங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிருப்தியுடன் பணியாற்றி வருவதாகவும் அவர்களுக்கு போதியளவு சுதந்திரம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவ மேஜர்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு விசேட புலனாய்வுப் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவ மேஜர்களின் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு நம்பிக்கை கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Western Provincial Department of Education

# G.C.E. (O/L) EXAMINATION-2010 ENGLISH LANGUAGE- PAPER I

Answer all Questions

**1 Hour**

**1) Complete the following job advertisements. Use words given in the box. *The first one is done for you.***

females, accounts, team, nurses, plumbers, hospital,Book keeper coach, ~~electricians~~, hair dressers, construction

A contractor who has building sites in the North and East urgently needs (1) electricians , and (2) ............... Vacancies exist for masons in their (3) .................. sites. Accommoda-tion provided. T.P.0332222002

Experienced (4) .............. are wanted for a private (5) ............... Salary negotiable. Apply before 5 th 2010 .P.O.Box.596, Kadana.

A leading school in Gampaha needs the services of a (6) .................. to train the under 15 Cricket (7) .......... for the all Island Tournament. Call immediately. T.P.0332222202

(8) A...........capable of maintaining financial (9) .............. indepen-dently. Wanted urgently to a holiday resort in Hikkaduwa. Apply within 7 days. P.O.Box 19, Hikkaduwa

Wanted experienced (10) ............. to a Beauty Saloon should be able to serve both males and (11) ............ Contact:Vindya - 0714424225

**2) Read about the English courses and answer the questions given below. Write the number of the relevant course in the box against each statement. *The first one is done for you.***

(1) 20,000 people have learnt to Speak English with *DILINI*

♦

Dilini allows you to study when & where you want to. We will send you cassettes and books. Listen and Read to be fluent in English. To find out more Fill and post the form One month free trial Money back guaranteed

(2) **CORRESPONDANCE COURSE**

♦

We are the island's largest Home Study School. 10,000 people have made their future with us. At the start you will receive books and cassettes and the address of your personal teacher You have to send your work to your teacher every week. S/he will mark it and talk to you about it on telephone. After 06 months you will be able to Speak Fluently. For details call -033-2260980

(3) **CALL TODAY FOR A BETTER FUTURE!**

Would you like to speak English in a week? YES! It's possible Our course means that you spend 5 days Listening and Speaking only in English You will spend 4 nights and 5 days in a luxury hotel attending classes, having meals with your teachers, watching videos and playing games speaking in English 100% all the time.

**LANGUAGE IN RESIDENCE**

| | | | |
|---|---|---|---|
| (a) Meet your teacher | 3 | (b) Learn very quickly | |
| (c) Write for information | | (d) Phone for information | |
| (e) Phone your teacher | | (f) Watch videos | |
| (g) Study for a month without paying | | (h) Play games as you learn | |
| (i) Post your lessons | | (j) Follow classes in hotel | |
| (k) Study at any place you like | | | |

**3) Select the utterances given in the box and complete the conversation between Sanduni and the Hotel Warden. *The first one is done for you.***

Sanduni : Excuse me (1) Can I ask a few questions?
Warden : Yes of course you can.
Sanduni : First, (2) ........................ . I was very cold Last night.
Warden : (3) ............................................................ .
Sanduni : Thank you. Can I use the library in the evenings?
Warden : (4) ................................... you have to work in your room.
Sanduni : Oh! Ok. One more thing (5) ............................. Can they leave the car in the university car park?
Warden : No, they can't (6) ..........................................................
Sanduni : Right. Thanks anyway
Warden : You're Welcome.

a) only students can park there
b) I'm afraid it closes at 8 O'clock
c) can I have another blanket
d) My parents are coming to see me on Sunday
e) ~~Can I ask a few questions.~~
f) Yes. You can have two if you like

**4) Read the instructions given to the students of Grade 11 by their English teacher complete the grid.**


**Memorandum**

**To all students in Grade 11**

Your English paper will be held on Wednesday, December 15th, at 8.30 a.m. Please note the following instructions.
Arrive punctually at 8.00 a.m. get ready to start at 8.30 a.m.
Go quietly in to the examination hall and find your place. Leave everything behind except your pen and the identity card.
Read the instructions given in the paper well. Make sure you understand the questions and what to do with them. But don't waste time. You have only three hours to answer sixteen questions.
Remember to write the Index Number in both Paper I and II. Never leave a question unanswered.
Write clearly, so that the examiners can read your answers. Pay attention to capital letters and punctuation.
Check your work carefully before you hand over the papers.
Work hard before the exam but try to relax and sleep well the night before the exam.
Good luck!

1) This memorandum is for : ..........................................................
2) The English paper is on : ..........................................................
3) Students have to report at : ..........................................................
4) Students are allowed to take : (a) ..................................................
(b) ..................................................
5) Time duration of the paper : ..........................................................
6) No. of questions in the paper: ..........................................................
7) The important things while answering : a) ..................................
b) ..................................
8) The night before the exam you should : ...................................

**5) Write five sentences describing picture.**



**6) Write paragraph on one of the following. Use about 50 words.**

a. The most interesting person I have met
b. The best book I have read
c. Polythene - the biggest enemy

7) Read the following text and answer the questions given.

My neighbour's children love playing hide and - seek as all children do, but no one expected that a game they played last week would be reported in the local paper.

One afternoon, they playing in the street just outside the post-office. Young Deshan, who is only five years old, found the perfect place to hide. His sister Dilini, had shut her eyes and was counting up to ten when Deshan noticed that the small metal door of the letter box had been open. The postman had just taken all the letters out and had gone into the post-office to see if there any parcels. Deshan climbed into the letter-box and pulled the door from the inside so hard that it locked.

Soon realizing what he had done, he became very frightened and started crying. Meanwhile, Dilini was looking for him everywhere but could not find him. It was lucky she happened to stop outside the letter-box and hear her brother's cries. She immediately ran to tell the postman who hurried out to unlock the metal door. Deshan was now free, but he had such a bad fright that he could not stop crying.

The postman, however, soon found a way of making him laugh again. He told him that the next time he wanted to hide in a letter-box, he should remember to stick a stamp on himself.

1) What was the writer's neighbour's favourite game? ..........................
2) Where did Deshan choose to hide? ..................................................
3) Why did not the postman see Deshan enter the letter-box? .................
4) Who opened the door of the letter-box? ............................................
5) How did the postman stop Deshan from crying? ..................................

(see page 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பூகோள வெப்பமாதல் (Global warming)

சுவட்டு எரிபொருட்களினதும் காபனை அடிப்படையாகக் கொண்ட ஏனைய பொருட்களினதும் எரியூட்டலின் மூலம் காபனானது $CO_2$ வாயுவாக வெளிவிடப்படுகிறது. பூகோள வெப்பமாதலிற்கு அல்லது பச்சைவீட்டு விளைவிற்கு இந்த $CO_2$ வாயு பிரதான காரணியாக உள்ளது.

வளி மண்டலத்தில் குறைந்த செறிவு வீதத்திலேயே பச்சைவீட்டு வாயுக்கள் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. கொள்கை ரீதியாக வளிமண்டலத்தில் இவ்வாயுக்கள் அதிகளவு வெப்பதை அகத்துறிஞ்சுகின்றன. இதனால் பூமியின் வளிமண்டல வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கிறது. பூகோள வெப்பமாதல் சுற்றாடலுக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் தீங்கு விளைவிப்பதாக அமைகிறது.

$CO_2$ வாயுவும் ஏனைய பச்சைவீட்டு வாயுக்களும் பச்சைவீட்டு யன்னலுக்கு பதிக்கப்பட்டுள்ள கண்ணாடி போன்று தொழிற்படுகின்றன. இக் கண்ணாடி சூரியனிலிருந்து வருகின்ற கட்புல ஒளியை பூமியை சென்றடைய அனுமதிக்கும். ஆனால் , அழிவை ஏற்படுத்தும் கீழ்ச்செந்நிறக்கதிர் (Infrared ray)அல்லது வெப்பக்கதிர் வீச்சுக்களை அகத்துறுஞ்சுகிறது. இவ் வெப்பத்தின் விளைவாக வளிமண்டலத்திற்கும் பூமியின் மேற்பரப்பிற்கும் இடையில் கிட்டத்தட்ட பூமியின் மேற்பரப்பிற்கு மேலே 10-60km வரையான உயரத்திலுள்ள வளியின் வெப்பநிலை உயர்வடைகின்றது.

21 ஆம் நூற்றாண்டில் பூகோள வெப்பமாதல் மிகப்பெரிய சூழல் அச்சுறுத்தலாக அமையவிருக்கின்றது.

இது உலகத்தின் எந்தத் திசையிலிருந்தும் வருவதுடன், பூமியிலுள்ள எல்லா சூழலியல் தொகுதிகளையும் பாதிக்கிறது. இந்த பிரச்சினையானது நேரடியாக அல்லது மறைமுகமாக மனித செயற்பாட்டையும் பாதிக்க முடியும்.


பிரதானமாக பூகோள வெப்பமாதலை ஏற்படுத்தும் காரணிகள் பச்சைவீட்டு வாயுக்களாகும்.

அவையாவன காபனீரொட்சையிட்டு ($CO_2$), மீதேன் ($CH_4$), நைத்திரன்ஒட்சைட்டு ($N_2O$), குளோரோபுளோரோகாபன் (CFC) மற்றும் ஓசோன் ( $O_3$ ).பொதுவாக இவ்வாயுக்கள் வளிமண்டலத்தில் மிகக்குறைந்த அளவில் காணப்படுகின்ற போதிலும் இவற்றின் கீழ்ச் செந்நிறக்கதிரை அகத்துறுஞ்சும் தன்மையினால் இவை வளிமண்டல வெப்பநிலையில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.


18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைத்தொழில் புரட்சியின் தொடக்கத்தில் $CO_2$ வாயு30%, $N_2O$வாயு15% மற்றும் மீதேன் வாயு 100% ஆகக் காணப்பட்டது. தற்போது அபிவிருத்தியடைந்த நாடுகளின் பச்சை வீட்டு வாயு வெளியேற்றம் 60%. ஆனால், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம் துரித கதியில் அதிகரித்து வருகிறது.

$CO_2$வாயுவானது பின்வரும் செயற்பாடுகள் மூலம் வெளியேற்றப்பட்டு பூமியின் வளிமண்டலத்தைச் சென்றடைகிறது. அவையாவன:

சக்திவலு நிலையம், வாகனங்களின் புகை (car,truck, minivan, etc.), கட்ட வேலைகள் (Building construction), மற்றும் காடழித்தல்(Deforestation). கடந்த 10000 ஆண்டு காலத்தின் போது, வளிமண்டலத்தில் காபனின் இருப்பு மாறாது காணப்பட்டது.ஆனால் தொழிற்சாலைகளின் அடிப்படை வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்ட பின்னர் காபன் இருப்பில் பாரிய மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. தற்போது வருடாந்தம் 7 பில்லியன் தொன் காபனானது வளிமண்டலத்தினுட் செல்கிறது. சுவட்டு எரிபொருட்களின் எரியூட்டல், சீமெந்து உற்பத்தி, வாயுக்களின் எரியூட்டல் போன்ற மனித செயற்பாடுகளினால் வெளியேற்றப்படும் மொத்த $CO_2$ அளவு 6.2 பில்லியன் தொன் ஆகக் காணப்படுகிறது.



பூகோள வெப்பமாதலுக்கு $CO_2$வாயுவானது முதலாவது பிரதான காரணியாக இருப்பதுடன், மீதேன் வாயு இரண்டாவது முக்கிய காரணமாகும். வளிமண்டலத்திலிருந்து $CO_2$ வாயு வெப்பத்தை உறுஞ்சுவது போன்று, 20 மடங்கு அதிகமான அளவு வெப்பத்தை மீதேன் வாயு உறுஞ்சுவதாக IPCC (Intergovernmental Panel on Climate Change) தகவல்கள் உறுதிப்



படுத்துகின்றன.

கடந்த 100 ஆண்டுகளில் வளிமண்டலத்தில் மீதேன் வாயு 145% ஆக உயர்வடைந்துள்ளது. நெல்வயல்கள், சேற்று நிலங்களிலுள்ள பக்றீரியாக்கள் (Bacteria) மற்றும் சுவட்டு எரிபொருட்கள் போன்றவற்றிலிருந்து பிரதானமாக மீதேன் வாயு உருவாகிறது. வயல்களில் நீர் தேங்கி நிற்கையில் நெல் வளருகிறது. இதன்போது உருவாகும் காற்றின்றிய நிலையில் மண்ணிலுள்ள சேதனப் பொருட்கள் (Organic matter) பிரிகையடைவதினால் மீதேன்($CH_4$) வாயு வெளியேற்றப்படுகிறது.

பூகோள வெப்பமாதலிற்குக் காரணமான மற்றுமொரு வாயு நைத்திரஸ் ஒட்சைட்டு ($N_2O$). இது நிறமற்றது. தீ பற்றும் தன்மையற்றது (nonflammable) .அத்துடன் இனிமையான மணம் உடையது. பொதுவாக இவ் வாயுவை சிரிக்கும் வாயு (Laughing gas)என்று அழைப்பார்கள். சில சமயங்களில் இவ்வாயு மயக்க நிலையை (unaesthetic) ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

$N_2O$ வாயுவானது பிரதானமாக சமுத்திரங்கள், மழைக்காடுகளிலிருந்து உருவாகிறது. நைலோன்(Nylon), நைத்திரிக் கமிலம் உருவாக்கம்($HNO_3$), பசளை, Catalytic converters பொருத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் சேதனப் பொருட்களின் எரியூட்டல் போன்ற மனித செயற்பாடுகளால் $N_2O$ வாயுவானது வளிமண்டலத்தில் சேர்கிறது. குளிரூட்டி, குளிர்நிலையை உருவாக்கும் சாதனம்(airconditioner) , aerosol propellants,நுரையாக்கி (foam packing), காவலிகள் (Insulators), கரைப்பான்கள் (Solvents) போன்றவற்றின் மூலம் குளோரோபுளோரோகாபன் (CFC) வாயுவானது நாள்தோறும் வளிமண்டலத்தில் சேர்கிறது.

**ஆரணி பில்வமங்களம்,**
உதவி விரிவுரையாளர்,
இரசாயனவியற் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்த நச்சு வாயு ஓசோன்படை அழிவிற்கு (Ozone layer depletion) வழங்குகின்றது.

இவ்வையகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் அனைத்திற்கும் பெரும் தீங்கினை விளைவிக்கக்கூடியவை சூரியனிலிருந்து வெளியேறுகின்ற புற ஊதா (Ultraviolet rays) கதிர்களாகும். இக்கதிர்கள் பூமியை ஊடுருவாது தடுப்பதற்கு இயற்கையாகவே வாயுவினாலான மென்படையொன்று புவியைச் சுற்றிப் பரிணமித்துள்ளது. இதுவே ஓசோன் படையாகும். இது பூமியிலிருந்து 25000 km உயரத்தில் வியாபித்துள்ளது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். குளோரோபுளோரோ காபன் வாயுவின் ஒரு அணு மட்டும் ஓசோன் படையிலுள்ள பத்தாயிரம் அணுக்களைச் செயலிழக்கச் செய்கின்றன. இதனால் ஓசோன் படையின் தடிப்பு குறைவடைவது மட்டுமல்லாது அதன் சிதைவிற்கும் வழிவகுக்கின்றது.

(தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 33

**எல்லை $_{\pi \to 0}$ $\left(\frac{2}{\pi}\right)$ சைன் $\left(\frac{\pi}{2}\right)$ இன் பெறுமானம் என்ன?**

**விடைகளை 21.12.2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 32க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
**சஞ்சிகா புவனேஸ்வரன்**
**392, நாவலர் வீதி, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

**புதிர் 32 இற்கான விடை:** $\frac{1+\sqrt{5}}{2}$

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 33**

சரியான விடை :........................................
முழுப்பெயர் :........................................
முகவரி :........................................
:........................................
தொ.பே. இல :........................................
கையொப்பம் :........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவர்களுக்கு அடிபணியாது முடிவுகளை எடுத்தார் ஸ்ரீமாவோ

## ஜனாதிபதி மஹிந்த புகழாரம்



வெளிநாட்டவர்களின் அழுத்தங்களைப் பொருட்படுத்தாது நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன்களை முன்நிறுத்தியே முன்னாள் பிரதமர் மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முடிவுகளை எடுத்தார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகின் முதலாவது பெண் பிரதமராக மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பதவியேற்றதன் ஐம்பதாவது ஆண்டு நினைவு விழா கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு7 இல் உள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் உரையாற்றுகையில் முன்னாள் பிரதமரான மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உலகின் முதலாவது பிரதமராக நியமனம் பெற்றமை இலங்கைக்கு மாத்திரமல்லாமல் முழு உலகுக்குமே பெரும் கௌரவமாகும்.

இதன் மூலம் முழு பெண் சமுதாயத்திற்கும் கௌரவமும் அந்தஸ்தும் கிடைக்கப் பெற்றது. எமது மறைந்த பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை முன்மாதிரியாகக் கொண்டு தான் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மறைந்த இந்திராகாந்தி, பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் மார்க் கிரட் தட்சர் போன்றோர் பிரதமர்களாக உருவாகினர்.

முன்னாள் பிரதமரான மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தான் அரச தலைமைப் பதவியான பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்தார். 1956 ஆம் ஆண்டில் முன்னாள் பிரதமரான மறைந்த எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க விட்டுச் சென்ற இடத்திலிருந்து தமது அரசியல் பணிகளை முன்னெடுத்தார். நான் தேர்தலில் போட்டியிட 1970 இல் வேட்புமனு குழுவுக்கு முன்பாக நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்த சமயம் அங்கிருந்த அன்றைய சிரேஷ்ட அமைச்சர்கள் என்னை விடவும் எனது சகோதரனை அபேட்சகராக நியமிக்கவே விரும்பினர். இருப்பினும் மறைந்த முன்னாள் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க என்னையே அபேட்சகராக நியமிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அந்த நிகழ்வு இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது.

அவர் பிரதமராக பதவியேற்ற ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியாகும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவரது வழிகாட்டல்களைப் பின்பற்றி தாய் நாட்டின் அபிவிருத்திக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க எமது அரசாங்கமும் கட்சியும் ஒரு போதும் பின்னிற்காது என்றார்.

இந்நிகழ்வின்போது முன்னாள் பிரதமர் மறைந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தொடர்பான நூலொன்றும் வெளியிடப்பட்டது. இந்நூலின் முதல் பிரதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கி வெளியிடப்பட்டது. (ஸ்ரீ-2)

# நோர்வேயின் உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம்

நோர்வேயின் உயர்மட்ட வர்த்தகப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டின் முதல் பகுதியில் குறித்த வர்த்தகப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ட்ஸ்டாட் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பிரதமர் டி.எம்.ஜயரட்ணவுடன் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நோர்வே தூதுவருக்கும் பிரதமருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இலங்கையில் அதிகளவு முதலீடு செய்ய நோர்வே அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக ஹில்டே தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கையில் சில கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நோர்வே முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதெனவும் இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு நம்மூரில் நத்தார் போட்டிகள்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு மெதடிஸ்த திருச்சபையால் நம்மூரில் நத்தார் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் சி.கே. தங்கராஜா தலைமையில் வண்ணார் பண்ணை மெதடிஸ்த தேவாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் அனைத்தும் திறந்த போட்டிகளாக நடைபெறவுள்ள அதேவேளை போட்டியில் ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். அந்த வகையில் கீழ் குறிப்பிடப்படும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

★ சிறந்த நத்தார் தாத்தா போட்டியில் 15 வயதிற்கு மேற்பட்டவர்கள் சிரேஷ்ட பிரிவினராகவும் 15 வயதிற்கு கீழ்பட்டவர்கள் கனிஷ்ட பிரிவினர்களாகவும் பங்குபற்றலாம்.

★ சிறந்த வாழ்த்து மடல் தெரிவிற்கு (எண்ணெய் நிறம், நீர்ச்சாயம், பஸ்ரெல்,பென்சில், பேனா, கொலாஜ் முறை, இயற்கை மர இலைகள் என்பவற்றால் தயாரிக்கலாம். போட்டியில் எத்தனை வாழ்த்து மடல்களையும் முன்வைக்கலாம்.

★ சிறந்த கேக் தெரிவிற்கு ஒரு கிலோவும் ஒரு கிலோவிற்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம்.

★ சிறந்த நத்தார் மரம் (இயற்கை மரம் அல்லது பிளாஸ்டிக் தேசிய ஆக்கமாக அமையலாம்.)

★ சிறந்த ரபன் வாத்திய இசைக்குழுத் தெரிவிற்கு ஒரு குழுவில் 5 பேர் மட்டும் பங்கு கொள்ளலாம். எத்தனை குழுவும் பங்கு கொள்ளலாம். ஒரு குழு தெரிவு செய்யப்படும்.

★ சிறந்த பாலகன் தொட்டில் போட்டியில் தொட்டிலுக்கான இடத்தை அலங்கரித்து வழங்குதல் வேண்டும். ஒரு குழுவில் 12 பேர் வரை கலந்து கொள்ளலாம்.

★ தேசிய உடைப் போட்டியில் 15 வயதிற்கு கீழ்ப்பட்ட ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் பங்கு கொள்ளலாம். சிங்களம் அல்லது தமிழ் தேசிய உடைகளுக்கு முக்கிய கவனம் செலுத்தப்படும்.

இப்போட்டியில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எனவும் பங்கு கொள்ள விரும்புவர்கள் 021 22 26128, 0771341855 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## கல்விசார் ஊக்குவிப்பு நிகழ்வு

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை நடாத்தும் கல்விசார் ஊக்குவிப்பு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக மல்லாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி புஷாலினி தியாகராஜா மற்றும் சுன்னாகம் மக்கள் வங்கி உதவி முகாமையாளர் சி.சிவகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# 2010.12 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

✠1041- பைசண்டைன் பேரரசி சோயி தனது வளர்ப்பு மகனை ஐந்தாம் மைக்கல் என்ற பெயரில் பேரரசனாக்கி னாள்.

✠1541- இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் மனைவியும் அரசியுமான கத்தரீனுடன் தகாத உறவு வைத்திருந்தமைக்காக தொமஸ் கல்பெப்பர்ம், பிரான்சிஸ் டெரெகம் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

✠1655- யாழ்ப்பாண ஆளுநர் "அன்டோனியோ டி மெனேசா" மன்னாரில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் முகத்துவாரம் என்னும் இடத்தில் சிறை பிடிக்கப்பட்டார்.

✠1684- ஐசக் நியூட்டன் தனது புவியீர்ப்பு விதிகளின் கொள்கைகளில் எழுதிய கெப்லரின் விதிகளின் தீர்வுகள் ரோயல் சபையில் படிக்கப்பட்டது.

✠1807- சென்னையில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

✠1817- மிசிசிப்பி ஐக்கிய அமெரிக்காவின் 20ஆவது மாநிலமாக இணைந்தது.

✠1868- உலகின் முதலாவது சமிக்ஞை விளக்குகள் லண்டனில் நாடாளுமன்றுக்கு வெளியே நிறுவப்பட்டது.

✠1898- ஸ்பெயின்-அமெரிக்கா போர் நிறுத்த உடன்பாடு பாரிசில் கைச்சாத்திடப்பட்டது.

✠1901- முதலாவது நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன.

✠1902- அஸ்வான் அணை திறக்கப்பட்டது.

✠1902- தாஸ்மேனியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

✠1906- அமெரிக்க ஜனாதிபதி தியொடோர் ரோசவெல்ட் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். இது ஒரு அமெரிக்கர் பெற்ற முதலாவது நோபல் பரிசாகும்.

✠1936- இங்கிலாந்தின் எட்டாம் எட்வேர்ட் மன்னன் முடி துறப்பதாக அறிவித்தான்.

✠1941- இரண்டாம் உலகப் போர்: மலாயாவுக்குக் கிட்டவாக ஐக்கிய இராச்சியத்தின் இரண்டு கடற்படைக் கப்பல்கள் ஜப்பானியர்களால் மூழ்கடிக்கப்பட்டன.

✠1941- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் பிலிப்பைன்சை அடைந்தன.

✠1948- மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா பொதுச் சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாள் ஆக அறிவிக்கப்பட்டது.

✠1975- ரஷ்யரான அந்திரேய் சாகரொவ் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.

✠1981- தெற்காசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்க பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஐ.நா பொது அவை ஏற்றுக்கொண்டது.

✠1984- தென்னாபிரிக்க கருப்பின மதகுரு டெஸ்மண்ட் டுட்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார்.

✠1989- மங்கோலியா கம்யூனிசத்தில் இருந்து மக்களாட்சிக்கு அமைதியாக மாற்றம் பெற்றது.

✠2006- வாகரை, மாங்கேணியில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் 17 பொதுமக்கள் கொல் லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

✠1750- திப்பு சுல்தான், மைசூர் இராச்சியத்தின் மன்னன் (இ.1799)

✠1804- ஜேகோபி, ஜெர்மனிய கணித மேதை (இ.1851)

✠1851- மெல்வில் டியூவி - அமெரிக்கா. நூலக அறிவியலை வளர்த்தவர் (இ.1931)

✠1878- ராஜாஜி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சுதந்திர இந்தியா வின் முதலாவது ஆளுநர் (இ.1972)

✠1891- நெல்லி சாக்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜெர்மனியர்(இ.1970)

✠1934- ஹவர்டு மார்டின் டெமின்- அமெரிக்கா வைரசுகளைப் பற்றிய ஆராய் சசிக்காக 1975 இல் மருத்துவத்திற் கான நோபல் பரிசு பெற்றவர். (இ.1931)

### இறப்புகள்

✠1896- அல்பிரட் நோபல், சுவிடனைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர் (பி.1833)

✠1960- சேர் சிற்றம்பலம் கார்டினர்

✠1987- சுப்ரமணிய ராயூ, தமிழ் எழுத்தாளர் (பி.1948)

✠2001- அசோக்குமார்,இந்திய நடிகர் (பி.1911)

✠2006- ஆகுஸ்டோ பினோச்சே,சிலி நாட்டு சர்வாதிகாரி (பி.1915)

**இன்று உலக மனித உரிமைகள் தினமாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Continuity of page 07)

8) There is a Drama at Bandaranayaka M.V. You bought two tickets. One for you and the other for your friend.

MANAME
In aid of Cricket Association
Bandaranayaka Maha Vidyalaya
Gampaha
At the main hall
December 10th, 2010 Row : B
3.30 p.m. Seat : 15
Rs, 100/=

Write a note to your friend inviting him to the drama. Give all information. Use a bout 40 words.

## PAPER II 2 HOurs

9) **Read the following text. In each line one word is incorrect and it is underlined. Write the correct word in the space provided.** ***the first one is done for you.***

My home is full of memories. It's the home when I ____where
Was born and I still live there. Its Sanduni's home too. ..................
Of course! But she don't share my feelings. 'What ..................
a ugly building!' She said, when she first saw it. 'You ..................
don't real want to live here, do you? She asked. I won ..................
of course, in the end, we didn't had enough money ..................
of a new house, so she had to move in. There were a ..................
lot of problem with the place: old water pipes, holes ..................
in a roof, and the biggest worry-no electricity. We ..................
solve most of the problems over the years but Sanduni ..................
still feels like a visitor. I'm the sad person over that but ..................
there is nothing I can do. ..................

10) **Complete the following text with the words given in the box.** ***the first one is done for you.***

| | | |
|---|---|---|
| everyone | ~~everywhere~~ | anyone |
| everything | no one | something |

I love my job. I travel all the time and (i) everywhere I go, I try to visit all the tourist sights. I find it hard to spend only two or three days in a city, but I always want to see (ii) ..................... I can, in the time I have, (iii) .................. I know prefers traveling to work by car, but I always take the train.It's much more relaxing. You can look at the countryside or read the daily newspaper, and there's (iv) ................ interesting to talk with other passengers. When I go to work very early there is (v) ...................... to talk. But when the office aid walks through and asks 'Does (vi) .................. want tea?' I feel very much better.

11) **Read the poem and answer the questions.**

Believe in Yourself
Jillian K.Hunt
Set your standards high
You deserve the best.
Try for what you want
and never settle for less.
Believe in yourself
No matter what you choose.
Keep a winning attitude
And you can never lose.
Think about your destination
But don't worry if you stray
Because the most important thing
Is what you've learned on the way.
Take all that you've become
To be all that you can be.
Soar above the clouds
And let your dreams aet you free.

1) Why does one has to set his/her standards high? ......................
2) Write the line which the poet advises the reader to achieve his or her aims? ......................
3) How can one never lose when doing something?...
4) Does one have to worry if he or she strays? ..............................
Why? ..............................
5) Read the last verse.
Find a word which is similar in meaning to the following phrases.
(i) rise above : ..................
(ii) able to do what you want : ....................

12) **Sisira and Saman are discussing their trip to Badulla. Complete the conversation with the correct form the adjective in the box.** ***The first one is done for you.***

| | | |
|---|---|---|
| good | exciting | healthy |
| cheap | ~~more comfortable~~ | difficult |

Saman : I like being comfortable. A train is (1) more comfortable than a bike. But you're right about the exercise. I know that it's (2) .............. than sitting in a train.
Sisira : Yes, and we haven't got much money, and going by bike is the (3) .......................way.
Saman : But at least sleeping is free on the train!
Sisira : If you can sleep! People talk and sing and eat all night. It'll be worse.
Saman : Ok, but what about luggage? It's (4) ..................... to carry everything on a bike than on a train.
Sisira : All right. Let's take the train. On the other hand a bike trip is (5) ............ than a train journey. You never know what's going to happen next.
Saman : We'll never agree. Perhaps the (6) .................. way is to go by car.

13) **Fill in the blanks in the following text on Dengue. Use the most suitable text from the box.** ***The first one is done for you.***

| | | | | |
|---|---|---|---|---|
| a | aching | after | also | amount |
| areas | by | ~~carried~~ | daylight | empty |
| is | prevention | the | this | yet |

**Dengue**

Dengue has become a threat to all Sri Lankans. Dengue is a mosquito (1) carried disease. It is caused (2) ................. virus. The disease (3) ................. characterized by severe headache, (4) ........... bones, and high fever. (5) ............... carrier, called "Aedes" is (6) ............ mosquito that usually bites (7) ............ sundown, But vaccine is 8) ........ available. So the best (9) ............. is the eradication of (10) .............. mosquito and its breeding (11) ................. It breeds in small (12) ............ of still water; therefore (13) ................ any container which holds stagnant water.

14) **You heard that a friend of yours has involved in a drug scandal. Write a letter to him giving some advice.**
**You may include - how you got to know**
a few kind words
harmful effect of drugs
how to get rid of this bad habit
the importance of a healthy body

or

Grade 11 students wish to visit the harbour at Hambanthota after the O/L examination is over. Write a letter to the Director General, Port Authority at Hambanthota asking permission to visit the place. Give the following details.
- date and time of the visit
- number of students and teachers participating
- duration of your visit
- request the authority to provide a guide to explain

Use about 125 words.

15) **Read the following text and answer the questions given below it.**

Hasitha lived with his parents until he was twenty-one years old and then he got a job as an engineer at the Katunayaka Air Port, so he left home. He found a comfortable flat which had two rooms, a small kitchen and a bath room. He lived there in his own.

At first he cleaned it himself, but he did not want to go on doing this, so he determined to find someone else to do it instead of him. He asked a lot of his fellow workers at the air port what they did about this, and at last one of the mensaid, 'Oh, Podihamy comes and cleans my flat regularly. She washes the dishes, irons my shirts and keeps the place neat and tidy and so on, I'll introduce her to you. She's a charming old lady. She does her best, but she hasn't got much energy.'

"Well, you'd better ask her to come and see me, please, 'Hasitha answered. So the next evening podihamy came to see him, and she agreed with pleasure to come to his flat every morning for an hour.

After she had been working for Hasitha for two weeks, he looked at the mirror in his bedroom and thought, "that mirror looks very dusty. Podihamy's forgotten to clean it. I can write on it with my finger." He wrote a message in dust. "I"m coughing whenever I breathe because everything in the room is very dusty."

He came home at 7 O'clock that evening, and when he had eaten his dinner, he went into his bedroom and looked at the mirror. "**That silly woman** still hasn't cleaned it!" he said to himself. "Allit needs is a cloth."

But then he bent down and saw a bottle infront of the mirror. "I didn't put that bottle there." he thought. Podihamy must have left it. "He picked the bottle up and looked at it carefully

"She's written some words on it," he said to himself. He read the words. they were : "COUGH MEDICINE"

1) Underline the correct answer.
(i) Hasitha left home because
(a) he was twenty one years old (b) of his parents
(c) he found a job (d) it was a flat
(ii) During the first two weeks ..... cleaned the house.
(a) Hasitha (b) a fellow worker (c) Podihamy (d) an old lady
2) Write the sentence which says Hasitha lived alone.
3) Why did Hasitha try to find someone to clean the flat?
4) Write two things Podihamy did at the friend's place.
5) How did Hasitha know that Podithamy had read his message?
6) Find words from passage when have the same meaning as the following
(a) strength - ...................... (b) pleasant - .....................
7) What do the following refer to?
(a) **That silly woman** in paragraph 5 - ..................
(b) **it** in paragraph 5 - ..................

16) **Write on one of the following. Use about 200 words.**

1) You have been asked to speak on "The wild life of Sri Lanka and the dangers animals face" Write your presentation.
You may include :
- the places the animals live
- their lifestyles
- why they are in danger
- your suggestions to improve their livelihood

2) Write an essay on "Television in Sri Lanka"
- mention two channels you like to watch
- say about their programmes
- the programmes you like and dislike with reasons
- your suggestions for improvement

3) Complete the story.
It was getting dark and our guide told us the evening is the time, the animals come out their hideouts for food. So we thought of returning to the Safari Hotel for the night. But the jeep we were traveling did not start..

4) Your friend Dilini does not like sports. But you believe sports help to build our characters. Write the dialogue you had with her. Continue the dialogue.
You : The whole world believes sports help to build one's character except you.
Dilini : I strongly disagree with that. Let me tell you how I feel ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தம் தேசிய அடையாளத்தை நிலைநிறுத்த பாடுபட்ட சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன்



கடந்த நூற்றாண்டு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகிறது. ஆங்கிலேயரின் வருகையால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, கலாசார மாற்றங்கள் ஈழத்தில் செல்வம், கல்வி ஆகியன படைத்த ஒரு வகுப்பினரை உருவாக்கியது.

இத்தகைய வகுப்பினரின் குடும்பம் தான் சேர். பொன். இராமநாதன் தோன்றிய குடும்பமாகும்.

கொழும்பில் வாழ்ந்து புதிதாகக் கிடைத்த சுகபோகங்களில் திளைத்தாலுங்கூட நமது கலாசாரப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாப்பதிலும், அதன் வளர்ச்சிக்குரிய பங்கினை ஆற்றுவதிலும் இக்குடும்பம் தலையான பணியைச் செய்தது.

சைவப்பெருவள்ளலின் பாட்டனாராகிய குமாரசுவாமி முதலியார் இலங்கையில் ஆங்கிலேயர் ஆரம்பித்து வைத்த சட்ட நிரூபண சபையின் (1833) முதற் தமிழ்ப் பிரதிநிதி.

அவரோடு தொடங்கிய இவர்களின் அரசியற் பிரவேசம் சேர். பொன். இராம நாதனின் மருமகனாகிய சு.நடேசபிள்ளை வரையும் (1950கள்) நீடித்தது.

அதாவது சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையில் வேறு எக்குடும்பமும் பெற்றிராத சிறப்பினை இவர்கள் பெற்று அரசியல் வானில் கொடிகட்டிப் பறந்தார்கள்.

### அரசியல் பிரவேசமும் பிற பணிகளும்

1851ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி பிறந்து 1930ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி சிவபதமடைந்த சேர். பொன். இராமநாதனின் வாழ்க்கை ஒரு கர்மவீரனின் வாழ்க்கையாக அமைந்துள்ளது.

நாவலர் பெருமானின் ஆசியுடன் 1879 இல் சட்ட சபையின் தமிழர் பிரதிநிதியாகக் கால்வைத்த இவர் 1892 வரை இப்பதவியை வகித்தார். பின்னர் 1911 இல், முதல் முதலாக, படித்த இலங் கையர் பிரதிநிதியாகச் சென்ற இவர் இறக்கும் வரை இச்சபையில் பங்களித்து பிரித்தானிய கவர்ணரின் சிபார்சினால் சட்ட சபையில் அங்கத்துவம் கிடைத்தாலுங்கூட தமது நேர்மை, அஞ் சாமை, வாதத் திறமையால் என்றும் நியாயத்திற்கே, தர்மத்திற்கே போராடிய கர்ம வீருமாவார்.

இலங்கையின் அரசியற்றிட்ட வளர்ச்சிக்கு இவர் தோற்றுவித்த இலங்கைத் தேசியச் சங்கம், பின்னர் தமது சகோதரர் சேர்.பொன். அருணாசலத்தால் உருவாக்கப்பட்ட இலங்கைத் தேசியக் காங்கிரசில் இவர் ஆற்றிய பங்களிப்புகள், டொனமூர் அரசியற் சீர்திருத்தத்தை எதிர்த்து இது "தமிழ் மக்களின் மரண ஓலை" எனக் கர்ஜித்து 1930 இல் ஒரு மகஜருடன் இங்கிலாந்து சென்று வாதாடியவை என்பன இவரின் தலைசிறந்த அரசியற் பணிகளாகும்.

கொழும்பு சட்டக் கல்லூரியினையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தையும் உருவாக்கினார்.

1879-1930 வரை இலங்கை அரசியல் வானில் வேறெந்தத் தலைவரும் பெற்றிராத சிறப்பையும் பெருமையையும் சைவப் பெருவள்ளல் பெற்றிருந்தார் எனலாம்.

1892 இல் இந்நாட்டின் சொலிசிற்றர் ஜெனரலாகி 1905 இல் ஓய்வு பெற்றார்.

### கல்விப் பணி

தான் எவ்வாறு அரசியற் பணிகளிலிருந்து கல்விப் பணிக்காகத் தம்மை அர்ப்பணிக்க விரும்பினார் என்பதைப் பின்வருமாறு சைவப் பெருவள்ளல் எடுத்துரைத்துள்ளார்.

"ஐந்து வருடங்களுக்கு முன்னர் (1905 இல்) நான் சொலிசிற்றர் ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வெடுத்து தீவிரமாகக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினேன்.

எனது கல்விச் சேவைகளது நோக்கம் மக்களைத் தமது தேசியத் தன்மையை இழக்காது பாதுகாத்தலும் அக்காலத்திலே இறைபக்தி, நன்நடத்தை, அரச விசுவாசம், முதியோரை மதித்தல் போன்ற இலட்சியங்களை உதாசீனஞ்செய்த நவீன கல்வி முறையின் செல்வாக்குகளிலிருந்து பாதுகாத்தலுமே."

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது மேற்றிசையின் லௌகீக ஞானமும், கீழ்த்திசையின் ஆத்மீக ஞானமும் இணைந்து நல்லொழுக்கமுள்ள ஆத்மீக வளர்ச்சி கொண்ட, உள்ளத்தூய்மை, உள்ளச் சமநிலை கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே இவரின் நோக்கமாக விருந்தது.

1913 , 1921 ஆகிய ஆண்டுகளில், இவர் ஆரம்பித்த இராமநாதன், பரமேஸ்வராக் கல்லூரிகள் இத்தகைய பண்புகளை உருவாக்கவே உருவாகின. இராமநாதன் கல்லூரியின் இலச்சினையான "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக் கடவுளே" என்பது இந்நோக்கினை எடுத்துக் காட்டுகிறது.

இராமநாதன் கல்லூரிக்கு 1927 இல் வந்த காந்தி அடிகள் "சேர்.பொன். இராமநாதனின் பரோபகாரத்திற்கும் சிந்தனைச் சிறப்பிற்கும் நினைவாலயமாக நிலைத்து நிற்கும் இந்நிறுவனத்துக்கு நான் வராது இருப்பேனாயின் என் வாழ்வெல்லாம் கவலைப்பட்டிருப்பேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். பரமேஸ்வராக் கல்லூரியை யாழ்ப்பாண வளாகமாகப் பொறுப்பேற்ற போது அன்றைய கல்வி அமைச்சர் பதியுத்தீன் முஹமத் பின்வருமாறு கூறினார்.

"தாம் நிறுவிய இரு கலாசாலைகளின் மூலம் உயர் கல்வித் துறையிலே இணையற்ற அரும்பணிக்கு அன்றே வித்திட்டு வைத்த சேர். பொன். இராமநாதன் அவர்களின் வள்ளன்மையினையும் தீர்க்கதரிசனத்தையும் மனமாரப் பாராட்டுகின்றேன்" என்றார்.

### தமிழரின் சைவசித்தாந்த தத்துவத்தை உலகறியச் செய்தவர்

தலை சிறந்த கல்விமானாகிய சேர். பொன். இராமநாதனின் பெருமை ஆசியா என்ன ஐரோப்பிய நாடுகளிலும் பிரகாசித்தது.

இந்தியாவில் சிதம்பரத்தில் நடைபெற்ற முதலாவது சைவசித்தாந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

திருக்குறள், தமிழ் மகாநாடுகளில் தலைமை தாங்கவும் இவர் பலமுறை அழைக்கப்பட்டிருந்தார். ஔவையாரின் ஆத்திசூடி, திருக்குறள் ஆகியனவற்றுக்கு விளக்க உரையும் தந்தார்.

சைவ சித்தாந்த அடிப்படையில் பகவத் கீதைக்கு விளக்கவுரை தந்த பெருமையும் இவருக்குண்டு. இவரது பணிகள் எல்லாவற்றிலும் இவரது ஆத்ம விசாரம் தலைதூக்கி நின்றது.

இவருக்கு இந்துமதத்தில் மட்டும் புலமை இருக்கவில்லை.

புத்த மதம், கிறிஸ்தவம் ஆகியவற்றிலும் இவருக்கு ஆழ்ந்த புலமை உண்டு. இந்து மதத்தையும் விவிலிய வேதத்தையும் ஒப்பிட்டு இவர் விரிவுரைகள் ஆற்றியதால், பின்னர் இவ் விரிவுரைகள் தனியான நூல்களாக வெளிவத்தன.

### அறப்பணியும் அறக்கொடைகளும்

ஆத்மீக சிந்தனையின் சிறப்பான பங்களிப்பாக விளங்குவதுதான் கொழும்பில் கருங்கல்லினால் புனரமைக்கப்பெற்ற கொச்சிக்கடைச் சிவன் கோயிலாகும்.

அரசியல், உலகியல், ஆன்மீகம் ஆகியவற்றை இணைத்துத் தலைசிறந்த ஆத்ம ஞானியாக வாழ்ந்த மகான்.

நிரம்பிய செல்வம் படைத்து, மக்கட்பேறு கிட்டியிருந்தும் கூட இவற்றை எல்லாம் கடந்து தமது சொத்தை தமது குடும்பத்துக்கு மட்டுமல்ல தமது சமுதாயமும் ருசிக்க வேண்டும்

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
தலைவர் பரமேஸ்வராக் கல்லூரி
இயக்குநர் சபை

என்று எண்ணியவர். தனது பணிகளுக்கு அறக்கட்டளைகளையும் இவர் ஸ்தாபித்திருந்தார்.

இவற்றை வழி நடாத்த இராமநாதன் கல்லூரி சைவ ஆளுநர் சபை, பரமேஸ்வராக் கல்லூரி ஆளுநர் சபை ஆகியவற்றையும் உருவாக்கினார். பரமேஸ்வராக்கல்லூரி ஆளுநர் சபைக்கு கிளிநொச்சியில் 350 ஏக்கர் காணியையும் அன்பளிப்புச் செய்திருந்தார்.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைக்கு மேலும் தமிழ் நாட்டில் கொடைக்கானலில் இவர் அளித்த 5 ஏக்கர் நிலமும் கோப்பாயில் இவர் அளித்த 25 ஏக்கரும் இன்று ஆக்கிரமிக்கப்பட்டதால் இவற்றிலிருந்து எதுவித வருமானமும் ஆளுநர் சபைக்குக் கிடைக்கவில்லை.

சுருங்கக்கூறின் இவர் செய்யாத தர்மமே இல்லை எனலாம். இவரது பரோபகாரத்தினை "பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம் நயன் உடையான் கண்படின்" என்ற திருக்குறளின் அடிகள் நமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

இவரது வாழ்க்கையை நாம் படிப்பதன் விளைவு இவரது வாழ்க்கை சரித்திரத்திலிருந்து தெம்பும் தெளிவும் பெறுவதற்கே வரலாற்றின் பிரதான பயன்பாடும் இஃதேதான்.

## மனித உரிமை தினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதனை முன்னிட்டு ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் நடைபெறவுள்ளது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை சிறையில் வாடும் சுமார் 800 தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் தம்மை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறும் அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு காலதாமதமாகும் எனின் பிணையில் செல்வதற்கு என்றாலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரியே இவ் அரசியல் கைதிகள் போராட்டத்தை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

## வெள்ளைக்கொடி வழக்கின் இறுவட்டு பதிவை ஏற்பது குறித்த தீர்ப்பு 16 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இரத்தினபுரியில் நடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்தில் சரத் பொன்சேகா ஆற்றிய உரையின் சீராக்கப்பட்ட இறுவட்டு பதிவை வெள்ளைக்கொடி வழக்கில் சாட்சியமாக ஏற்க முடியுமா இல்லையா என்ற பிரச்சினை மீதான தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்றம் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போது சிரேஷ்ட அரச சட்டத்தரணி டிலான் ரத்நாயக்க மேலும் சில தக வல்களை வழங்கவுள்ளதால் கால அவகாசம் கோரி னார். இதை மனுதாரரின் சட்டத்தரணி ஆட் சேபித்த போதும் ட்ரையல் அட் பார் (ஜுரி இல் லாத விசாரணை) நீதிமன்றம் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

(ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், பாடசாலை அதிபர் திருமதி கு.அசோக்குமார் ஆகியோர் உரையாற்றுவதையும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்த பெ.டினுஜனுக்கான கௌரவிப்பின் போது யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் மற்றும் விருந்தினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து மாணவனை வாழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# மருதங்கேணி பொதுச்சந்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் மருதங்கேணி பொதுச்சந்தை மீள ஆரம்பிக்கப்படாமையால் மீள்குடியேறிய மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.பழைமை வாய்ந்த இச்சந்தை யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்த நிலையில் 2006 ஆம் ஆண்டு தற்காலிக கொட்டகையில் இயங்கி வந்தது.

வடமராட்சி கிழக்கு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட நிலையில் அப்பொதுச்சந்தை ஆரம்பிக்கப் படாமையால் மருதங்கேணி, வத்திராயன்,உடுத்துறை,ஆழியவளை,செம்பியன்பற்று, மாமுனை ஆகிய கிராம மக்கள் பளை, கிளிநொச்சி, சாவகச்சேரி பகுதி சந்தைகளுக்கு சென்று பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதால் நேரம், பணம் அதிகமாக வீணாகின்றது என தெரிவிக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கென 58 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இச்சந்தையானது புனரமைக்கப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் துரிதமாக இச்சந்தையை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

# யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

யாழ். மாநகரசபைப்பகுதி 01.06.1976 ஆம் ஆண்டு 38/16 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபை பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ் எல்லைக்குள் நடைபெறும் அபிவிருத்திகள் யாவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பிரசுரிக்கப்பட்ட கட்டட திட்டமிடல் ஒழுங்கு விதிகளுக்கமைய மாநகர சபையின் அனுமதி பெறப்பட்ட பின்னரே நடைபெற வேண்டும்.

குறிப்பாக காணி உரிமையாளர் தமது காணியை பல துண்டுகளாக பிரிக்கும் போது அணுகு வழிகளின் அகலம், காணியின் விஸ்தீரணம், வாகன திருப்புமுனை என்பவற்றை கருத்திற்கொண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிடல் ஒழுங்கு விதிகளுக்கமைய பிரிக்கப்படுதல் வேண்டும். மேலும் காணியின் விஸ்தீரணம் 1 ஹெக்ரேயருக்கு மேற்படுமானால் விஸ்தீரணத்தின் பாதை தவிர்ந்த 10% காணியை பொதுப் பாவனைக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பதுடன் 0.5 ஹெக்ரேயருக்கு மேற்பட்ட காணியாக இருப்பின் காணி பிரிவிடல் வரைபடத்தை நகர திட்டமிடுவோர் நிறுவனத்தின் கூட்டிணைப்பு உறுப்பினர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

இதனை நில அளவைப்படம் தயாரிக்கும் நில அளவையாளர்களும், காணியை பிரிவிடுகை செய்து விற்பனை செய்பவர்களும் கவனத்தில் கொள்ளல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி. யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.
02.12.2010

(C-1776)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறி

(அல்வாய்)

வடமராட்சியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி விளையாட்டுத்துறை பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வரவேற்புரையையும் விளக்கவுரையையும் ஜி.ரி.இசற் நிறுவன இணைப்பாளரும் ஆறுதல் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளருமான சுந்தரம் டிவகலாலா நிகழ்த்தவுள்ளார்.நன்றியுரையை வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் நடத்தவுள்ளார்.

இதுவரை பதிவு செய்த முன்பள்ளி ஆசிரியர்களை இப்பயிற்சி நெறிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

# ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள சகல நிறுவனங்களின் தலைவர்களும் திணைக்களத்தின் தலைவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு வேதனம்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் மார்கழிமாத வேதனப்பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஒளிவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் செல்வன் ச.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அங்கிலிக்கன் திருச்சபை வணபிதா என்.ஜே ஞானகாருண்யன்,சிறப்பு விருந்தினர்களாக யாழ். பேராயம் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரன்ஸ்ரீபன் மற்றும்கல்லூரி பழைய மாணவன் பிரான்சிஸ் யோசப் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

மேலும்இந்நிகழ்வில் வரவேற்பு நடனம், பேச்சு, குழுநடனம், கிறிஸ்மஸ் கீதங்கள், நாடகம், பரிசளிப்பு மற்றும் கிறிஸ்மஸ் தாத்தா வருகை என்பன நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-9)

# பூங்காவனத் திருவிழா

யாழ்.கோண்டாவில் சபரீஸ ஐயப்பன் தேவஸ்தானதில் பூங்காவனத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலும் இத்திருவிழாவில் சிறப்பு நிகழ்வாக 16 ஆவது தீர்த்த யாத்திரை குழுவின் பஜனை, சண்முகம் வசந்தனின் புல்லாங்குழல் இசைக்கச்சேரி, திருவூஞ்சல் என்பவற்றுடன் நயினை குணரட்ணம் சிவாவின் கலியுக வரதன் ஸ்ரீ ஐயப்பன் நாம இன்னிசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளதாக ஆலய பிரதம குருவும் குருசாமியும் அறங்காவலருமான அரிகர சுத சர்மா அறியத் தருகின்றார். (ஸ்ரீ-9)

# சீல் வைக்கப்படாத நிறுத்தலளவை படிகள் பொலிஸாரால் பறிமுதல்

(உடுப்பிட்டி)

மந்திகை பகுதியில் உள்ள மரக்கறிச் சந்தையில் நிறுத்தலளவை படிகள் அனைத்தும் கடந்த புதன்கிழமை காலை 11 மணிக்கு பருத்தித்துறை பொலிஸாரினால் சோதனையிடப்பட்டது.

இதன்போது சீல் வைக்கப்படாத நிறுத்தலளவை படிகள் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-3-52)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார்ஆலயச்சூழலில் அமைந்திருக்கும்பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் பத்து மணிப்பூசை முடிவுற்றதும் ''பாவை வழிபாடு '' என்னும் விடயம்பற்றி வதிரி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

+++

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத் தில் பிரதீ வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் ''தேவிபாகவதம்'' என்னும் விடயம் பற்றி சிரேஸ்ட விரிவுரையாளர் அ.குமரவேல் தொடர் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

# கத்திக்குத்து சம்பவத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(கரவெட்டி)

நெல்லியடி நாவலர்மட வீதியில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் குடும்பத்தவர் ஒருவர் பலத்த காயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் நெல்லியடி நோக்கி வந்து கொண்டிருந்த குடும்பஸ்தரை இளைஞன் ஒருவன் கத்தியால் கழுத்தில் குத்தி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளான்.

இருதரப்பினருக்கும் முன்பகை இருந்ததாகவும் சம்பவதினம் பகை முற்றி குறித்த இளைஞன் இச்செயலைச் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளான்.

இச்சம்பவத்தில் கரணவாய் மத்தி மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த கணேஸ்றஞ்சன் (வயது 31)என்று குடும்பஸ்தரே பலத்த காயமடைந்தவராவார்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் பூத்த மல்லிகை– அவள்.
கவனிப்பார் அற்ற நிலவு.

– கவிஞர் சுசீ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இளம் தமிழ் விதவைப் பெண்களுக்கு அரசு மாதாந்தக் கொடுப்பனவு வழங்க வேண்டும்

ஓர் இனத்தின் பண்பாட்டு அழிவென்பது பல வகைகளில் இடம்பெறக் கூடியது. அதில் யுத்தம் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

யுத்தத்தினால் இனம்சார் அடையாளங்களும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் அறுந்து விடுகின்றன.

இதன் விளைவு பண்பாட்டுச் சிதைவாகும். இந் நிலைமையே தற்போது யுத்தத்தில் தோற்றுப்போன தமிழினம் அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

இனம், மொழி, மதம், பண்பாடு, ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன யாவும் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கக்கூடிய தளத்தில் அல்லது யுத்தத்தில் குடும்பத் தலைவர்களைப் பறிகொடுத்துவிட்டு பதைபதைத்துக்கொண்டிருக்கும் பூமியில் நின்று பிடிப்பது கடினமே. இது பற்றி எடுத்துரைப்புக்கள் கூட, வெற்றிபெறுவது சாத்தியமாகாது.

அதேநேரம் எங்கள் கலாசாரம் தொடர்பில் நாம் வெறும் கவலை கொள்வோராக இருப்பதும் கலாசாரத்தை பாதுகாப்பதற்கான வழியன்று.

எனவே இழந்துபோன– இழந்துகொண்டிருக்கின்ற எங்கள் கலாசாரத்தை பாதுகாப்பது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

இது விடயத்தில் தமிழ் புத்திஜீவிகள் மற்றும் பொது அமைப்புக்கள், தேவஸ்தானங்கள், மாதர் அமைப்புக்கள் என்பவற்றின் பங்களிப்பு அவசியமானதாகும்.

இதற்கு மேலாக, யுத்தத்தில் கணவன்மாரை இழந்த இளம் விதவைகள் தொடர்பில் இரண்டு விடயங்கள் கருத்தில் எடுக்கப்படுவது அவசியம்.

அதில் ஒன்று யுத்தத்தில் பலியான படையினரின் மனைவியர் மறுமணம் முடித்தாலும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது போல,

யுத்தத்தில் கணவன்மாரை இழந்த தமிழ் இளம் விதவைகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றை அரசு வழங்குவதற்கான நடவடிக்கையை தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் எடுத்தாக வேண்டும். படையினரின் மரணம் என்பது போரிடுவதற்காக அவர்கள் வந்தபோது நடந்த நிகழ்வு.

ஆனால் வீட்டில் இருந்த போது விழுந்து வெடித்த செல்லினால் கணவனைப் பறிகொடுப்பதென்பது மிகக் கொடூரமான நிகழ்வு.

அரசினால் பாதுகாக்கப்பட வேண்டிய குடிமக்களுக்கு யுத்தத்தால் இழப்பு ஏற்படுமாயின் அதன் ஒட்டுமொத்தப் பொறுப்பையும் அரசே பொறுத்தாக வேண்டும்.

ஆகவே மறுமணம் முடித்தாலும் படையினரின் மனைவியருக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்ற நாடாளுமன்றத் தீர்மானம் போல யுத்தத்தினால் கணவனையிழந்த அப்பாவி தமிழ் இளம் விதவைகளுக்கும் ஓய்வூதியத்திற்கு ஈடான தொகையை மாதாமாதம் அரசு வழங்குவது மனுதர்மமாகும்.

இதற்கு அடுத்த விடயம்; விதவைப் பெண்களின் 'மறுமணம்' பற்றியதாகும்.

இது தொடர்பில் எழும் வியாக்கியானங்கள், விமர்சனங்கள் யாவற்றையும் கடந்து மறுமணம் புரிதலுக்கு ஏற்ற சந்தர்ப்பங்களை வழங்குவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இதில் மாதர் சங்கங்கள் அர்ப்பணிப்புடன் பங்காற்ற முடியும். இது விடயத்தில் எங்கள் புலம் பெயர் உறவுகளின் உதவிகளும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படலாம்.

# நமது மூதாதையர் கட்டிக்காத்த பண்பாடுகளை அழியவிடக்கூடாது

## உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

நமது மூதாதையர் கட்டிக்காத்த கலா சார பண்பாட்டை இளையோர் கட்டிள மைப்பருவத்தில் அழியவிடக் கூடாதென உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஷிராணிமில்ஸ் தெரிவித்துள்ளார்.

உடுவில் மகளிர் கல்லூரி உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நமது மூதாதையர் கட்டிக்காத்த கலாசார பண்பாட்டை நமது இளையோர் கட்டிளமைப் பருவத்தில் அழிய விடக்கூடாது. பெற்றோர் தமது பிள்ளைகளை அன்பாகவும் கண்டிப்பாகவும் வளர்த்து எடுக்கவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் பெற்றோர் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்துகின்றனர். தமது அன்பை பெற்ற பிள்ளைகள் மீது பரிமாறுவதில் சிரமத்தை எதிர் கொள்வதால் பிள்ளைகள் திசைமாறிச் செல்கின்றனர். இதனால் எமது கலாசாரம் சிதைவடைந்து பெண்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

இதனைத் தவிர்க்க வேண்டுமானால், பிள்ளைகளை ஆன்மீக வழியினைப் பின்பற்றுவதற்கு நேரத்தை ஒதுக்கி ஆண்டவர் மீது நம்பிக்கை ஏற்படும் வகையில் சமய மரபுகளை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலமே நாம் நமது கலாசார பண்பாட்டை பாதுகாக்க முடியும் என அவர் கூறினார். (சு–2)

## வவுனியா வைத்தியசாலையில் 8 நோயாளர் விடுதிகள் அமைக்க அமைச்சரவை அனுமதி

வவுனியா பொது வைத்தியசாலைக்கு 200 கட்டில்களைக்கொண்ட 8 நோயாளர் விடுதிகளை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது இதற்கான அனு மதி வழங்கப்பட்டதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதி மக் களின் நலன் கருதியே இந்தத் திட்டத்தை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் முன்வைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் பொருளாதார அபிவிருத்தி கருதி ஜனாதிபதியின் தலைமையில் உபகுழு ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரின் ஏ32 வீதியின் 67 கிலோமீற்றர் பாதையும் புத்தளம், மன்னார் வீதியின் மறிச்சுக்கட்டி வீதியின் 379 கிலோமீற்றர் பகுதியும் புனரமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ–2)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தேவர்கள் எழும் மாதம்

தேவர்களுக்கு தைமாதம் முதல் ஆனிமாதம் வரையில் பகல் பொழுதாகவும் (உத்தராயணம்), ஆடியில் இருந்து மார்கழி வரையில் இரவாகவும் (தட்சிணாயனம்) கருதப்படுகிறது. இவ்வாறு பார்க்கும்போது மார்கழிமாதம் தேவர்கள் விழிப்பதற்கு ஆயத்தமாகும் காலை நேரமாகிறது. இக்காலத்தையே 'பிரம்ம முகூர்த்தம்' என்கிறோம். இம்மாதத்தில் அதிகாலையிலேயே எழுந்து நீராடி, வீட்டு வாயிலில் தண்ணீர், சாணம் தெளித்து கோயில்களுக்குச் சென்று தெய்வத்தை வணங்கினால் நோய் நீங்கி, குடும்பத்தில் ஐஸ்வர்யம் பெருக தேவர்கள் ஆசீர்வதிப்பர் என்பது நம்பிக்கையாகும். இச்சமயத்தில் தெய்வத் திரு உருவத்தைத் தூக்கிக் கொண்டு வீதி வீதியாக பஜனை பாடிக் கொண்டும் செல்வது தேவர்களை பக்தியுடன் எழுப்புவதற்காகத்தான்.

## சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 13 இலங்கையர்கள் விடுதலை

13 இலங்கையர்கள் மற்றும் ஒரு கிரேக்கர் ஆகிய சிப்பந்திகளுடன் சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் கடந்த மார்ச் முதலாம் திகதி சிக்கியிருந்த சவுதி அரேபியக் கப்பல் கடந்த 7 ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளது.

பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த சிப்பந்திகள் நலமாக உள்ளனர். கப்பல் உரிமையாளர்களிடம் இருந்து பெரும் தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டே சிப்பந்திகளையும் கப்பலையும் விடுவித்துள்ளனர்.

ஆனால் எவ்வளவு பணம் கப்பமாகக் கொடுக்கப்பட்டது? என்பது மிகவும் இரக சியமாகவேஉள்ளது. இக்கப்பல் ஜப்பானில் இருந்து சவுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த போதே கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்டது. (ஸ்ரீ–2)

# வெள்ளி நற்சிந்தனை 152

## பக்தியின் மொழி தமிழ்

நாம் கண்ணாரக் கண்ட காட்சியை இன்னொருவருக்குக் கூறுவதென்பது ஒரு சிறப்பான மொழியாற்றலாகும். அதிலும் உரை நடையிலன்றிக் கவிதைமொழியிற் சொல்வதற்குச் சிறப்பான மொழிப்புலமை தேவை. இத்தகைய மொழிப்புலமை சுந்தர மூர்த்திநாயனாரிடம் இருந்தது. இறைவனது கோல அழகைக் கண்டபோது அதை எல்லோரும் காணும் வண்ணம் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். அவருடைய மொழி பக்திமொழியாக வெளிப்பட்டுள்ளது.

இறைவனுடைய திருக்கோல அழகை அவர் காட்சிப்படுத்தும் முறைமை அவருடைய கவின் சுவையக்காட்டி நிற்கிறது. மூன்று வகையான அழகுக்கோலத்தினை ஒரு பாடலிலே காட்டுகிறார். சிவனுடைய திருக்காது, திருக்கை, திருமுடி என்பவற்றைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார். 'குண்டலம் குழை திகழ்காதனே' என்று முதலில் அறிமுகம் செய்கிறார். குண்டலம் என்பது நீண்டு தொங்கும் காதணி. அதோடு பொருத்தமுற ஒரு குழையும் காணப்படுகிறது. இரண்டு காதுகளிலும் வேறுபட்ட அணிகலன்கள். ஒருகாதில் குண்டலம் மறுகாதில் குழை. இது இறைவனின் அர்த்த நாரீஸ்வர வடிவத்தைக் காட்டி நிற்கிறது.

ஆனால் திருக்கையிலே கொடு மழுவாட்படையைத் தாங்கிய சிறப்பான அழகுவேறொரு திருக்கோல அழகைக் காட்டி நிற்கிறது. அடுத்து வண்டுகள் மொய்க்கும் அன்றலர்ந்த கொன்றை மலர்களைச் சூடிய சடைமுடியின் அழகைக் காட்டுகின்றார். இம்மூன்று அழகுத் தோற்றங்களையும் வாய்வெருவித் தொழுகிறார். துன்பம் மீதூரப் பெற்ற போது இறைவனை நினைந்து வாய் புலம்பும் சுந்தரர் தனது நிலையைப் பாடலிலே அழகாய் எடுத்துரைத்தார். தன்னுடைய விதிப்பயனால் பண்டைய பண்பற்ற வாழ்வியலை விடுத்து மனத்து அவசங்களையெல்லாம் நீக்கிப் பசுபதியின் இருப்பிடத்தையே வினவி வாழ்ந்த அந்தப் பழைய காலத்தை நினைவிற் கொணர்ந்து பாடுகிறார்.

பல நாட்கள் கடந்த பின்னர் கழுமல வளருகளுக்கு வந்தபோது அப்பதி சம்பந்தர் திருவவதாரம் செய்த திருப்பதியாதலால் அதன் உள்ளே மிதிக்கக் கூடாதென எண்ணுகிறார். அப்பதியின் புற எல்லையில் நின்று வழிபடுகிறார். அப்போது சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்தருளுகிறார். அந்த நிலையில் சுந்தரருடைய பக்தி அனுபவம் ஒரு பதிகமாக அமைந்துள்ளது.

திருக்கோயிலின் உள்ளே செல்லாமல் எப்படி இறையழ கைச் சுந்தரர் விரிவாகப் பாடினார் எனப் பலர் ஐயுறலாம். ஆனால் ஐம்புலன்களையும் ஒரு நிலைப்படுத்தி இறைவனைப் பற்றிய எண்ணத்தினை மனதிலே நிறுத்திக் கொண்டால் இது முற்றிலும் சாத்தியமாகும். இந்த இறையனுபவத்தை எல்லோரும் பெற வேண்டுமென்ற சுந்தரர் விருப்பம் பாடலில் வெளிப்பட்டு நிற்கிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"குண்டலங்குழை திகழ்காதனே
யென்றுங்
கொடுமழுவாட்படைக் குழகனே
யென்றும்
வண்டலம்பும் மலர்க்கொன்றைய
னென்றும்
வாய்வெருவித் தொழுதேன்
விதியாலே
பண்டை நம் பல மனமுங் களைந்
தொன்றாய்ப்
பசுபதி பதி வினவிப் பல நாளுங்
கண்டலங் கழிக்கரையோதம்

வந்துலவுங்
கழுமலவளநகர்க் கண்டு கொண்
டேனே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதமளவில் அவசரகால சட்டத்தை முழுமையாக நீக்குமாறு ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் அவசர காலச் சட்டத்தை முற்று முழுதாக நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை அதிக மாக ஈர்க்க வேண்டுமாயின் அவசரகாலச் சட்டத்தை நீக்குவது மிகவும் அவசியமான தென எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் எஞ்சியுள்ள சோதனைச் சாவடி களையும் நீக்கிவிடுமாறு கோரிக்கை விடுத் துள்ளார். பாராளுமன்ற பிரதேசத்தில் சோத னைச் சாவடிகள் காணப்படுவதாகவும் அவை அகற்றப்பட வேண்டுமெனவும் அவர் சபா நாயகரிடம் கோரியுள்ளார். நாட்டில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களைப் போன்று அவசர காலச் சட்ட நீடிப்பு குறித்த விவாதத்தின் போது குற்றச் செயல்கள் தொடர்பிலான புள்ளி விபரத் தரவுகளை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகம் நாட்டில் அதிகரித்துள்ளதாகவும் முக்கிய சூத்திரதாரி கள் கைதுசெய்யாது கீழ்மட்ட நபர்களே கைது செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்றில் நிறை வேற்றப்பட்ட கசினோ சட்டத்தினால் குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட சாத்தியம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஒரே இனம், ஒரே நாடு என குறிப்பிடுவதன் மூலம் மட்டும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது

## த.தே.கூ.தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள மக்களுக்கு மட்டும் ஜனாதிபதி யாக செயற்படுவதானால் எவ்வித பயனும் ஏற்படாது எனவும் இதனை ஜனநாயக மாகவும் கருத முடியாது எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

ஏனைய இனங்களின் ஜனாதிபதியாக வும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய லாற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள் ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து சர்வதேச சமூகம் செவிமடுக்க முயற்சிக்கும் போது அதற்கு அரசாங்கம் தடை ஏற்படுத் துவதாகவும் ஒரே இனம், ஒரே நாடு என குறிப் பிடுவதன் மூலம் மட்டும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாதென வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசி யல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நட வடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உதுல் பிரேமரட்ன பிணையில் விடுதலை

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல்பிரேம ரட்ன பிணையில் செல்வதற்கான அனு மதியை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உதுல் பிரேமரட்னவின் மனு விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்ட பொழுதே 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் தலா 5இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணையிலும் செல்வ தற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர அனுமதியளித்துள்ளார்.

இதேவேளை உதுல் பிரேமரட்ன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவோ அல் லது சுவரொட்டிகளை ஒட்டும் நடவடிக்கை களிலோ ஈடுபடக்கூடாதெனவும் நீதிபதி உத்த ரவிட்டார். (ஸ்ரீ-2)

# இரணைமடுக்குளத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் இராணுவ அதிகாரிகள் சிலர் அதற்கு தடை.

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

இரணைமடுக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபட பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அனுமதி வழங்கிய பின்னரும் சில இராணுவ அதிகாரிகள் அதற்கு தடை ஏற்படுத்தி வருவதாக கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன சனிக்கிழமை சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கடற் றொழில் நீரியல்வள அமைச்சு தொடர்பான வரவு- செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தின் இறுதியில் பதிலளித்து பேசும்போதே அமைச் சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரணை மடுக்குளத்தில் மீன்பிடிக்கத் தடை நிலவு வதாக விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.கூறி னார். எனினும் எனது வேண்டுகோளின் பேரில் இரணைமடு குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்குப் பாதுகாப்பு செயலாளர் அனுமதி வழங்கி உத்தரவும் பிறப்பித்தார்.

இதன்பிரகாரம் படையினரின் தளம் இருக்கும் ஒரு பகுதியை தவிர இரணை மடுக்குளத்தின் ஏனைய அனைத்து பகுதி களிலும் மீன்பிடியில் ஈடுபடமுடியும். எனி னும் அதற்கான பாதுகாப்பு செயலாளரின் உத்தரவு கிடைக்காத சில இராணுவ கட்ட ளை அதிகாரிகள் அங்கு மீன்பிடிக்க தடங்கல் ஏற்படுத்தி வருகின்றனர் என்று குறிப்பிட் டார். (ஸ்ரீ)

# விடுதலைப்புலிகளின் பூமியாக பிரித்தானியா மாறியுள்ளது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

பிரித்தானியா தமிழீழ விடுத லைப் புலிகளின் பூமியாக மாற்ற மடைந்துள்ளதென மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக் கப்பட வேண்டுமென அவர் விலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாத அமைப்பொன்றிடம் பிரித் தானியா மண்டியிட்டுள்ளமை வேதனை அளிப்பதாகவும் புதிய தமிழ் நாசிவாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு பிரித் தானியா மற்றும் நோர்வே போன்ற நாடுகள் ஆதரவளித்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கொத்தணி குண்டுகளை வைத்திருக்கும் பிரித்தானியா போன்ற நாடு கள் எவ்வாறு இலங்கையின் மனித உரிமை களை விமர்சனம் செய்ய முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஸ்ரீ-2)

# விக்கிலீக்ஸில் வெளியான இரகசிய ஆவணங்கள் குறித்து விசாரணை நடத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையத்தில் வெளியான இரகசிய ஆவணங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை நடாத்த அரசாங்கம் தீர்மா னித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 112 இரகசிய ஆவணங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப் படவுள்ளது.

இந்தத் தகவல்களை வழங்கியவர்கள் பற்றிய விபரங்களை மூடி மறைக்கும் நோக் கில் அமெரிக்கா குறித்த இணையத்தை முடக்கிய போதிலும் தகவல்கள் வழங்கியவர் கள் பற்றி அரசாங்கம் கண்டுபிடிக்க நடவடிக் கை எடுத்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அமெரிக்கா இலங்கையின் உள் விவ காரங்களில் தலையீடு செய்துள்ளமை இந்த இரகசிய ஆவணங்களின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்கத் தூதர கத்தின் அனுசரணையுடன் இலங்கையர்கள் சிலர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் திற்கு விஜயம் செய்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளின் மூலம் அம் பலமாகியுள்ளது. (ஸ்ரீ-2)


# குருபூசைத் தினம்

நிகழும் விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் 24ஆம் நாள் (10.12.2010) திருவோண நட்சத்திரம் கூடிய வெள்ளிக்கிழமை இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அத்திவாரமிட்டவரான

## சேர்.பொன்.இராமநாதன்

அவர்களின் குருபூசைத் தினமாகும். இதனையொட்டி இன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணிவரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகமும், விஷேட பூசையும் நிகழவுள்ளன.

அனைவரும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின் றோம். இன்று காலை 8.45 மணிக்குப் பல்கலைக்கழக வளவிலுள்ள சேர்.பொன். இராமநாதன் அவர்களின் சிலைக்கும் பல்கலைக்கழக சபாமண்டபத்திலுள்ள (Board Room) அவரின் உருவப்படத்திற்கும் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் அவர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

### பிற்பகல் நிகழ்ச்சி

காலம்: 10.12.2010 வெள்ளிக்கிழமை
நேரம்: பிற்பகல் 1.30 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
தலைமை: பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் (தலைவர், பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபை)
உரை: பேராசிரியர் ஈ. எஸ். ஐ. கீதபொங்கலன் (தலைவர், அரசறிவியல்துறை, கொழும்புப் பல்கலைக்கழம்)
விடயம்: இருபதாம் நூற்றாண்டில் தமிழ் அரசியல்: இராமநாதனின் சிந்தனைகளை அடிப்படை யாகக் கொண்ட ஒரு பின்நோக்கிய ஆய்வு.

### கலை நிகழ்ச்சிகள்

இராமநாதன் கல்லூரி மாணவிகள்
நடனத்துறையினர், யாழ். பல்கலைக்கழகம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

இங்ஙனம்
பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை, இந்து மன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-1773)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் நினைவுதின விழாவில் பேராசிரியர் கீதபொங்கலன் உரை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெருவள்ளலாருமான சேர்.பொன்.இராமநாதனின் நினைவு தின விழா இன்று காலை 7.00 மணிக்கு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பல்கலைக்கழகத்திலுள்ள உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தவுள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வில் இருபதாம் நூற் றாண்டில் தமிழ் அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு பின் நோக்கிய ஆய்வுரையில் கொழும்புப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை தலைவர் ஈ.எஸ்.ஐ.கீதபொங்கலன் நிகழ்த்தவுள்ளார். (ச-7)

## இலங்கை போர்க்குற்ற...

சட்ட நிறுவனத்தைச் சேர்ந்த முன்னணி குற்றவியல் சட்டவாளர் ஜூலியன் நோலஸ் தெரிவித்த கருத்தும் இணைக்கப்பட்டிருந்தது.

கடந்த வாரம் தமது செய்தி அறிக்கையில் ஒளிபரப்பிய வீடியோவில் காணப்பட்ட உடலம் இசைப்பிரியாவினது என்பதனை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊடகப் பிரிவில் பணியாற்றிய முன்னாள் போராளியான கல்பனா உறுதி செய்துள்ளாரென இச்செய்தியறிக்கை தெரிவித்துள்ளது.

சோபா என்ற இயற்பெயருடைய இசைப்பிரியாவைத் தனக்கு ஒன்பது வருடமாகத் தெரியுமெனவும் இருதய நோயாளியான அவர் ஊடகவியலாளராக எப்போதும் பேனா, குறிப்புப்புத்தகம் ஆகியவற்றுடனேயே காணப்பட்டதாகவும் ஆயுதப்பயிற்சியினைஅவர்பெற்றிருக்கவில்லை.

அவரது உடலம் என்பதை தன்னால் நூறு வீதம் உறுதியாகக் கூறமுடியுமெனவும் கல்பனா தெரிவித்துள்ளார். அதனை இசைப்பிரியாவின் குடும்பத்தினரும்நண்பர்களும்உறுதிசெய்துள்ளதாகவும் சனல் 4 தெரிவித்துள்ளது.

மேற்படி வீடியோக் காட்சி போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளுக்கு வலுவான சாட்சியமாக அமையுமெனக் கருத்து வெளியிட்ட சட்ட வல்லுனர் ஜூலியன் நோலஸ், அதன் மூலம் இக்குற்றங்களைப் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

27 வயதான இசைப்பிரியா 2009 ஆம் ஆண்டு, மேமாதம், பதினெட்டு அல்லது பத்தொன்பதாம் திகதியளவில் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் இக்கொலையில் மேஜர் ஜெனரல் சுமால் குணரத்தின தலைமையிலான சிறீலங்கா இராணுவத்தின் 53வது பிரிவினர் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும் சனல் 4 தெரிவித்துள்ளது.

எட்டு நிமிடங்கள் காண்பிக்கப்பட்ட இவ்விவரணத்தில் இசைப்பிரியா தமிழீழத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பது, இசைக்கருவியின் துணையுடன் பாடலொன்றைப் பாடுவது போன்ற முன்னைய பதிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன. (ச-5)

## தடையை நீக்கக்கோரி...

நீட்டிப்பை உறுதி செய்தது. மேலும் அதை சட்ட விரோத அமைப்பாக அறிவித்து கடந்த நவம்பர் 12ந் திகதி தீர்ப்பு கூறியது. இந்த தீர்ப்பானது இயற்கை நீதிக்கு முரணானது.

மத்திய அரசு வெளியிட்ட அரசாணையில் புலிகள் இயக்கம் தமிழ்நாட்டின் பகுதியையும் சேர்த்து தனி நாடு வேண்டி போராடுவது இந்திய இறையாண்மைக்கு எதிரானது என்று கூறி உள்ளது. அமெரிக்கா விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்திருந்தாலும் அந்நாட்டில் நாடு கடந்த தமிழ் ஈழ அரசு செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

போரில் சிதறடிக்கப்பட்ட புலிகள் உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் ஒன்று கூடி மீண்டும் போராடுவார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் கூறி இருப்பது தவறு. ஈழபோராட்டம் தொடர்பாக செய்திகள் வெளியாகும் இணையத்தளங்கள் யாவும் புலிகள் இயக்கத்திற்கு சொந்தமானதல்ல.

இதை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பாயம் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை உறுதி செய்வது அதனை சட்ட விரோத அமைப்பு என அறிவித்தது தவறு. எனவே தீர்ப்பாயத்தின் அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் வைகோ குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு வருகிறது. (ச-5-7)


யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் உயர்புள்ளிபெற்ற மாணவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.





| | | |
|---|---|---|
| மோகனபதி பிரசாந் 160 | சாந்தகுமார் தனிஸ்குமார் 150 | தயாளன் கோபிராஜ் 159 |
| பாலராசா தர்சன் 137 | மயூரேசன் நிதுசன் 133 | விக்கினேஸ்வரன் கிரோஜன் 131 |

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை.

(இ)


# ‘டயலொக்’ நிறுவனத்தினால் நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)




யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 14 பாடசாலைகளுக்கு டயலொக் நிறுவனம் பெறுமதி வாய்ந்த நூல்களை அன்பளிப்பாக வழங்கியது.

இது தொடர்பாக டயலொக் நிறுவனத்தின் யாழ். கிளை முகாமையாளர் தியாகராஜா சிவகுகன் தகவல் தருகையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு டயலொக் நிறுவனம் நூல்நிலையங்களுக்கான பெறுமதி வாய்ந்த நூல்களை வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி., பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, கோப்பாய் சரவ ணபவானந்தா வித்தி., அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி., ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி, கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தி., காரைநகர் கலாநிதி தியாகராஜா ம.ம.வி., இணுவில் மத்தியகல்லூரி, மயிலிட்டி றோ.க.த. பாடசாலை, யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி., பருத்தித்துறை சித்திவிநாயகர், மட்டுவில் ஸ்கந்தபுரம் ஸ்கந்தவரோதயா ஆகிய 14 பாடசாலைகளுக்கு நூல்கள் வழங்கப்படுகிறது.

இதில் மாணவர்களுக்கு பயனுள்ள பல ஆங்கில நூல்கள் அடங்கலாக 110 நூலக நூல்கள் வழங்கப்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.

இந் நூல்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.டயலொக் நிறுவனத்தில் நடை பெற்றது. இதன்போது யாழ்.கிளை முகாமையாளர் தி.சிவகுகன் நூல்களை வழங்கிவைத்தார். (ச-5)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் மீது பண்டிதை வைகுண்டம் கணேசலிங்கம் பாடியருளிய மகா கணபதிப்பிள்ளைத் தமிழ் நூல் வெளியீடு நாளை காலை 11.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆலயத்தின் பிரதான பூசகர் சிவஸ்ரீ ம.பிரபாகரக் குருக்கள் ஆசியுரை வழங்குவதுடன் வேலணை மத்திய கல்லூரியின்அதிபர் அருணகிரிநாதன் வாழ்த்துரை வழங்கவுள்ளதோடு நூலின் வெளியீட்டுரையினை ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி விகடகவி நா.மு.திருநாவுக்கரசு நிகழ்த்தவுள்ளார். (ச-7)

## 5ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட் இன் 5 ஆம் ஆண்டுநிறைவுவிழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் சி.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.அருள்வேல், சிறப்புவிருந்தினராக யாழ்.இந்துக்கல்லூரியின் உப அதிபர் எஸ்.நிமலன் மற்றும் ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் கே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

## ஜனாதிபதி...

அவ்வாறான ஒரு இக்கட்டுக்கு முகம் கொடுக்கவிடாமல் பாதுகாப்பது அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியின் பொறுப்பாகும்.

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையிலிருந்து விடுபட வேண்டுமானால் அவ்வாறான சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இடமளிப்பதுடன் ஒத்துழைப்பையும் நல்க வேண்டும்.

அதற்குப் பதிலாக ஜனாதிபதி தன்னுடைய ஆலோசகர்களின் முட்டாள்தனமான அறிவுரைகளின் பிரகாரம் தான்தோன்றித்தனமாக தொடர்ந்தும் செயற்பட முயன்றால் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரை விடுவிக்க ஆண்டவனால் கூட முடியாது போய்விடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## சுயாதீன...

அம்னெஸ்டியும் கியூமன் ரைட்ஸ் வாட்சும் தெரிவிக்கின்றன. அவர் விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளராக இருந்த இசைப்பிரியா என்று அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இறுதிப் போரில் இசைப்பிரியா கொல்லப்பட்டதாக இலங்கை அரசு கடந்த ஆண்டு கூறியிருந்தது. ஆனால் இசைப்பிரியா உள்ளிட்ட கைதிகள் நிராயுத பாணிகளாகவும் போர் முனையில் இல்லாதநிலையிலும் கொல்லப்பட்டதாகவே தெரிகிறது என இந்த மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

ஆனால் இந்த வீடியோவிற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மேதவல நிராகரிக்கிறார்.

இவை தொழில்நுட்ப ரீதியாக திருத்தி அமைக்கப்பட்டபடங்கள் என்றும் வேறு யாரோ செய்த போர்க்குற்றங்களை இலங்கை இராணுவம் செய்ததுபோல் காட்டுவதாகவும் இலங்கையின் நற்பெயரைக் களங்கப்படுத்தவே இந்த முயற்சி நடப்பதாகவும் அவர் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார். (ச-5)

## சீமான்...

தொடர்ந்து, விருகம்பாக்கத்தைச் சேர்ந்த அவரது சகோதரர் ஜேம்ஸ் பீட்டர் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு ரிட் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு 4 மாதங்கள் ஆகியும், அந்த வழக்கில் அரசு ஆஜராகி வாதாடவில்லை. கடைசியாக டிசம்பர் 6ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் எலிபி தர்மாராவ், ஹரிபரந்தாமன் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் முன்பு, நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், சீமானை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய உத்தரவிட்டது செல்லாது என்று தீர்ப்பு அளித்தனர். (ச-5)

## தமிழ்க்கட்சி...

பொதுவான நிலைப்பாடு, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினை களுக்கு தீர்வு காண்பதற்கு ஒருமித்த குரலில் குரல் கொடுத்தல் ஆகியன தொடர்பில் இச்சந்திப்பின்போது பேசுவதற்கு தமிழ்க் கட்சிகளின் அரங்கம் திட்டமிட்டுள்ளதாக சிவாஜிலிங்கம் கூறினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றவருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ்க்கட்சிகளின் அரங்கம் ஏற்கெனவே அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய
# நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
**கல்வியாண்டு 2011**
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் 11–12–2010
நாளை பி.ப 3.30 மணிக்கு

## நாடுமுழு...

கடுமையான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 58 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 876 பேர் தற்காலிக முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையம் தெரிவித்துள்ளது. (ச–5)

# ஆதாரங்கள் வெளிவரும்...

அரசாங்கத்தின் இத்தகைய போக்கானது வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதின் அவசியத்தை வெளிப்படுத்துவதாக மனித வுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு செயற்படும் மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பிரையன் அடம்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளதாக இந்த மனிதவுரிமைகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி கடந்த மாதம் 30ஆம் திகதி வெளியிட்ட வீடியோ காட்சி தொடர்பாகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள இந்த போர்க்குற்ற ஆதாரங்களில் படையினர் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பது வெளிப்படையாகவே தெரிவதாக இவ்வறிக்கையில் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வீடியோ காண்பிக்கப்பட்ட உடலங்களில் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்தியாளரான 27 வயதான இசைப்பிரியாவினுடையது என்பதை அவரது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் பல தகவல்களின் அடிப்படையில் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் உறுதிப்படுத்தி உள்ளது.

ஆனால் வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது (18.5.2009) போது 53வது படைப்பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களின் பெயர்ப் பட்டியலில் தொடர்பாடல் மற்றும் ஊடகப்பிரிவைச் சேர்ந்த இசைப்பிரியாவும் உள்ளடங்கி இருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் 21.06.2009 அன்று அறிவிக்கப்பட்டிருந்ததாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந் நிலையில், இசைப்பிரியா களமுனையில் கொல்லப்படவில்லை என்பதையும், சித்திரவதைக்கு பின்னரே படுகொலை செய்யப்பட்டார் என்பதையும் சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்டிருந்த வீடியோ உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை இசைப்பிரியா, அகல் எனப்படும் தனது ஆறு மாதப் பெண் குழந்தையையும் ஷெல் தாக்குதலில் இழந்திருந்தார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச–5)


# BARATHY
சித்தன்கேணி

புதிய வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரை
நாளை ஆரம்பம் :– 11-12-2010
சனி 7.00 am
நீங்கள் நன்கு அறிந்த இப்பிரதேசத்தின் மிக பிரபல்யம் மிக்க ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| *விஞ்ஞானம்* திரு. தேவா | *கணிதம்* திரு. சிவரூபன், திரு. சிவா |
| *தமிழ்* திரு. குகபரன், திரு. கஜிதரன் | *வரலாறு* திரு. சுதன், திரு. பிரதாப் |
| *ஆங்கிலம்* திரு. விஜயபாஸ்கர், திரு. மனோகரன் | *சமயம்* திரு. தரன், திரு. பார்த்திபன் |
| *வர்த்தகம்* திரு. திருக்குமரன் | *சுகாதாரம்* திருமதி சுபவதனி |
| *புவியியல்* திரு. சர்வேஸ்வரன் | *குடியியல்* திரு. சிவபாலன் |

தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு - திரு. கலாமோகன்

Note :- மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கல்வி கற்பிக்கமாட்டார்கள்.

❋ சென்ற ஆண்டு போல இவ்வாண்டும்
தரம் 9,10,11 வகுப்பிற்கு - 100 பேரும்
தரம் 6,7,8 வகுப்பிற்கு - 40 பேருக்கும்
அனுமதிகள் வழங்கப்படும்
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

ஆசிரியர்கள் குறிப்பு
விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெற இருப்பதால் உங்கள் அனுமதிகளை தாமதியாது உடன் பெற்றுக்கொள்ளவும்.
(C-1782)

Bachelor of Information Technology(BIT)
External Degree
OF
University Of Moratuwa

யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



முக்கிய திகதிகள்
விண்ணப்ப முடிவுத்திகதி: 15.12.2010
பதிவுகளுக்கான முடிவுத்திகதி: தை.2011
வகுப்பு ஆரம்பம்: மாசி.2011

தொடர்புகளுக்கு
Tel:-021 222 4142
Hot. 0773099308

ESOFT
114, Navalar Road
Jaffna

# பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் யாழ்ப்பாணம் – K.K.S றோட் இணுவில்

எமது நிறுவனங்களில் அதி உயர் பெறுபேறுகளை பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி
A/L DAY CLASS
கலை - வர்த்தகப்பிரிவு
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
13–12–2010 திங்கள் 8.00am
இரு இடங்களிலும் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
Note :- எமது மற்ற நிறுவனமான
BARATHY - சித்தன்கேணியிலும்
ஆரம்பமாகின்றன.
(C-1783)

## வர்ணக் கலண்டர்கள்
எம்மிடம் புதிய ஆண்டிற்கான அழகிய வர்ண பக்கலண்டர்கள் நூறிற்கும் மேற்பட்ட டிசைன்களில் கையிருப்பில் உண்டு. வர்த்தகப் பெருமக்கள் தங்கள் வியாபார விளம்பரங்களை பொறித்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
சரவணா அச்சகம்
இல. 233, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
0773706506
(C-1786)

# தவறிவிட்டது
612/1 கே.கே.எஸ்.வீதி நாச்சிமார்கோவிலடியைச்சேர்ந்த ச.உமாகாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (892461660V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் இதர ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கடந்த 08.12.2010 அன்று நாச்சிமார்கோவிலடிக்கும் யாழ்.நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பிற்கு T.P :- 0783255822
(3219)

# NEW SCIENCE HALL
KANNA THIDY ROAD JAFFNA
A/L DAY CLASS
பிரிவு II
ஆரம்பம் :- 13.12.2010 8.30am
(C-1778)

## கார் விற்பனைக்கு
13–XXXX வெள்ளை நிற MITSUBISI Lancer கார் எலோவிலுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :-
0778760905
(C-1787)

A/L - 2010
(DAY CLASS)
கலை, வர்த்தகப் பிரிவுகள்
டிசம்பர் – 13
திங்கள் – காலை
8 மணி
DMI
JAFFNA
(C-1784)

MyWay English ஆங்கில பயிற்சிநெறி
ஆரம்பம் : 11.12.2010 காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம்
ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவுகள் : 8 – 9, 10 – 11, 11 - 12, 1 – 2, 2 - 3
(ஏதாவது ஒரு பிரிவில் பயிற்சியில் சேரலாம்)
தனியார் அலுவலர், இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை
இவ்வருடம் AL எழுதி பல்கலைக்கழகம் தெரிவாகுவோர் மற்றும் பல்கலைக்கழகம் பூர்த்திசெய்தோரும் பயிற்சியில் சேரலாம்
MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456

| சுப்றா சித்தன்கேணி | சுப்றா வட்டுக்கோட்டை | ஆதவன் அளவெட்டி | கிருஷ்ணா மானிப்பாய் |
|---|---|---|---|

தரம் 1 முதல் A/L வரை
"தரமான கல்வி நம்பகமான சூழல் நம்பிக்கையான வெற்றி"
2011ம் ஆண்டுக்கான புதியபிரிவுகள்
(3205)
10.12.2010 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.